Registered as a newspaper

விலை - ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் -16+II

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | சித்திரை - 01 | 13-04-2004 | செவ்வாய்க்கிழமை | ஓசை 055


உங்கள் அனைத்து தேவைகளுக்கும்
R.V. பந்தல் சேவை
மூல்லைசாலை, தருமபுரம். (சி-9284) விநாயகர் வீதி, மயிலிட்டி.

- விடுதலைப்புலிகள் பலமுனை நகர்வு -

# மட்டு.தளங்கள், அலுவலகங்களைக் கைவிட்டு சில சகாக்களுடன் கருணா தப்பி ஓட்டம்!

## நகர்ப்பகுதி அலுவலகங்களும் மூடிக்கிடந்தன

(மட்டக்களப்பு)

**மட்டு-அம்பாறை மாவட்டங்களில் கருணாகுழு கட்டுப்பாட்டில் வைத்திருந்த பெரும்பகுதி விடுதலைப்புலிகளால் மீட்டெடுக்கப்பட்டுள்ளது. விடுதலைப்புலிகள் மேற்கொண்ட பலமுனை நகர்வுகளைத் தொடர்ந்து கருணா குழுவினர் இப்பகுதிகளை விட்டுத் தப்பி ஓடியுள்ளனர்.**

கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலையில் வெருகல் ஆற்றைக் கடந்து வாகரைப்பிரதேசத்தில் தமது நகர்வுகளை விடுதலைப்புலிகள் ஆரம்பித்ததைத் தொடர்ந்து கருணா குழு தப்பி ஓடத்தொடங்கியது.

வாகரைப்பிரதேசத்தில் சிறிதளவு இரத்தம் சிந்தப்பட்டதாயினும் அதன் பின்னரான விடுதலைப் புலிகளின் நகர்வுகளை அடுத்து கருணா குழு மட்டு-அம்பாறை மாவட்டங்களில் தளங்கள் அலுவலகங்கள் என்பவனவற்றிலிருந்து தப்பிஓடியுள்ளது.

குறிப்பாக கொக்கொட்டிச் சோலைப் பகுதி கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டதோடு தேனகம்

(15ஆம் பக்கம் பார்க்க)

## கருணா குழுவுடனான மோதலில் மூன்று போராளிகள் வீரச்சாவு

09.04.2004 அன்று மட்டு. அம்பாறை கதிரவெளிப் பகுதியில் கருணா குழுவினருடனான மோதலின் போது போராளிகள் மூவர் வீரச்சாவடைந்துள்ளனர்.

* லெப்டினன்ட்- பொதிகைத்தேவன் (வேலுப்பாண்டியன் பதுளை வீதி கித்துள்குளம் கரடியனாறு மட்டு)
* 2ம் லெப்டினன்ட்-சங்கொளியன் (கந்தசாமி-அருள்செல்வம் கடுக்காமுனை, கொக்கட்டிச்சோலை மட்டு)
* வீரவேங்கை-'மலர்க்குமரன் (தங்கராசா-குகன் மாவளையான் கரடியனாறு மட்டு)

ஆகியோரே வீரச்சாவடைந்தவர்களாவர் இம் மாவீரர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## கருணா வெளிநாட்டுக்கு ஓடியிருக்கலாம் புலிகளுடன் இணைந்து கொண்ட போராளி தெரிவிப்பு

கருணா வெளிநாட்டுக்குத் தப்பி ஓடியிருக்கலாம் அல்லது கொழும்பில் தங்கியிருந்து சில நாட்களில் வெளி நாட்டுக்குச் செல்லலாம். இவ்வாறு கருணாவின் பிடிக்குள் இருந்து நேற்று தப்பி புலிகளுடன் இணைந்து கொண்ட போராளியான வேணுகா லண்டன் பி.பி.ஸி.யின் தமிழோசைக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நான் மட்டு- அம்பாறை மகளிர் படை அணியின் நிர்வாகப் பொறுப்பாளராக சுமார் இரண்டு வருடங்களாக இருந்து வருகிறேன். அதற்கு முன்னர் ஐந்து வருடங்கள் வன்னி மாவட்டத்தில் இருந்தேன். எனது சொந்த ஊர்அம்பிலாந்துறை, நான் கருணாவிடம் இருந்து விலகி வரமுடியாத நிலையில் இருந்தேன். அவரை விட்டு வந்தால் பலநடவடிக்கைகள் எடுப்பார் என்பதனாலேயே இருந்தேன். நான் கருணாவின் பிடியில் இருந்தபோது அவருடன் சுமார் ஆயிரம் பேர்வரை இருந்தார்கள். மீனகம் இராணுவ முகாமிலேயே நாங்கள் இருந்தோம். அங்கு அறுநூறு பெண் போராளிகள் என்னுடன் இருந்

(15ஆம் பக்கம் பார்க்க)

## பல நூற்றுக் கணக்கான போராளிகள் புலிகளின் அணிகளுடன் இணைவு

(மட்டக்களப்பு)

விடுதலைப்புலிகளின் அணிகள் நேற்று கொக்கட்டிச் சோலையை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்ததையடுத்து கருணாவின் கட்டுப்பாட்டிலிருந்த பலபோராளிகள் விடுதலைப் புலிகளின் அணிகளை நோக்கி வந்துகொண்டிருக்கின்றனர் கரடியனாறு மீனகம் தளப்பகுதியிருந்த பலநூற்றுக்கணக்கான ஆண், பெண் போராளிகள் இவ்வாறு வந்து

(15ஆம் பக்கம் பார்க்க)

## விமானப்படை உலங்குவானூர்தியில் கருணா கொழும்புக்கு தப்பிஓட்டம்?

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புக் காட்டுப்பகுதியில் தரை இறங்கிய சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான உலங்குவானூர்தி மூலம் கருணாவும் அவரது நெருக்கமான உதவியாளர்கள் சிலரும் கொழும்புக்குத் தப்பிச் சென்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேனகம் அரசியல் தலைமையகம் உட்பட மட்டக்களப்பின் கட்டுப்பாட்டுப் பகுதியில் பெரும்பகுதி புலிகளால் மீட்கப்பட்ட நிலையில் காட்டுப் பகுதிக்குள் தப்பி ஓடிய கருணா அங்கிருந்து சிறிலங்கா வான்படையின் உதவியுடன் கொழும்புக்குச் சென்றுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறிலங்கா அரசிடமோ அன்றி கண்காணிப்புக் குழுவிடமோ அடைக்கலம் கோருவது தொடர்பாக உயர்

(15ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் அலைபத்திரிகை இன்று வெளிவருகிறது

மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலையிலிருந்து வெளிவரும் தமிழ் அலை பத்திரிகை இன்று வெளிவரும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. இப்பத்திரிகையை கடந்த ஒரு மாதத் திற்கு மேலாக கருணா குழுவினர் தமது பொய்ப்பிரச்சாரத்திற்கு பயன்படுத்தி வந்தனர். நேற்றுஇப்பத்திரிகை வெளிவரவில்லை. அப்பகுதி விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டதையடுத்து இன்று பத்திரிகை வெளிவரவுள்ளது.

## ஒரு தொகுதி போராளிகள் குடும்பங்களுடன் இணைவு

(அலுவலக செய்தியாளர்)

மட்டு அம்பாறை பிரதேசங்களில் கருணா குழுவின் பிடியில் இருந்து விடுதலை பெற்ற பின்னர் பெற்றோருடன் தொடர்பு கொண்ட போராளிகள் பெற்றோர்களால் அழைத்துச்செல்லப் பட்டனர்.

பெற்றோருடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளாத போராளிகள் தனியார் போக்குவரத்து சங்கத்தினருடன் தொடர்பு கொண்டு சங்கத்தின்

(15ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் இருநாட்கள் தரித்திருந்த பலகல்ல

சிறிலங்கா இராணுவத் தளபதி லெப். ஜெனரல் பலகல்ல நேற்று முன்தினம் முதல் நேற்றுப்பகல் வரை மட்டக்களப்பு இராணுவ முகாமில் தங்கியிருந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. கருணா குழுவினர் தப்பி ஓடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காகவே இவர் மட்டக்களப்பு இராணுவ முகாம் தங்கியிருந்திருக்கலாம் எனவும் அவர் நேற்று நண்பகல் அளவில் கொழும்பு திரும்பிச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கருணா குழுவிடம் மீளஒப்படைப்பு

(மட்டக்களப்பு)

வாகரையில் நடைபெற்ற மீட்பு நடவடிக்கையினைத் தொடர்ந்து கடலில் படகு மூலம் தப்பிச்சென்ற கருணா அணியைச் சேர்ந்த 18 பேர் நோர்வே ஐலண்ட் பகுதியில் கடற்படையினரால் கைது செய்யப்பெற்றனர். இவர்கள் அனைவரும் மட்

(15ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறை மாவட்ட மக்கள் புலிகளுக்கு வாழ்த்துத் தெரிவிப்பு!

(அலுவலக செய்தியாளர்)

கருணாவின் பிடியிலிருந்து அம்பாறை மாவட்டத்தினை விடுதலைப்புலிகள் மீட்டதன் மகிழ்ச்சியில் அப்பகுதி மக்கள் விடுதலைப் புலிகளுக்கு வாழ்த்துச்செய்தியினை நேரில் சென்று கையளித்து வருகின்றனர். தம்பிலுவில் திருக்கோவில் அக்கரைப்பற்று காரைதீவு பகுதி மக்கள் அம்பாறை மாவட்டத்

(15ஆம் பக்கம் பார்க்க)

## கருணா கோரினால் அவருக்கு அரசாங்கம் புகலிடம் வழங்கும்

### சிறில.பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்

(லண்டன்)

கருணா கோரினால் அவருக்குப் புகலிடம் அளிக்கப்படும் என சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில்ஹேரத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; கருணா இராணுவ ஹெலிகொப்டர் ஒன்றில் அழைத்துச் செல்லப்பட்டார் என்று வந்த செய்திகள், வதந்திகள் தான் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)



எமது புத்தாண்டு வாழ்த்துக்கள் !

ஈழநாதம் வாசகர்கள், விநியோகஸ்தர்கள்,
விளம்பரதாரர்கள் உட்பட அனைத்துத் தமிழீழ மக்களுக்கும்
எமது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.







# சாவு அறிவித்தல்

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நம.

**கலைஞர் திலகம்**

**ஸ்தபதி. சின்னத்துரை நவரத்தினம்**

**(ஆச்சாரியார்)**

யாழ்/காங்கேசன்துறை, மயிலிட்டியைப்பிறப்பிட மாகவும்,வன்னிமாவட்டம் மல்லாவியை தற்காலிக வதிவிடமாகவும்கொண்டஸ்ரீமுருகன் கனகசிற்பாலய ஸ்தாபகர் கலைஞர்திலகம் சின்னத்துரை நவரத்தினம் அவர்கள் 12.04.04 திங்கட்கிழமை யாழ்.இருபாலையில் விஸ்வபதம் அடைந்துவிட்டார். அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை(ஆசிரியர்), அன்னப்பிள்ளை தம்பதிகளின் ஏக புத்திரனும், தவமணி தேவியின் அன்புக்கணவரும், செல்வாமபிகை, செல்வேந்திரன்(டோகா),செல்வஸ்ரீ, செல்வமனோகரி, செல்வசுதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவரத்தினசிங்கத்தின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

*த.மு.*
*வீரபத்திரர் கோயிலடி,*
*இருபாலை.*

தகவல்:-
குடும்பத்தினர்.

(4435)

## வரிவிளம்பரம்

### காணாமல் போன பொருட்கள்

11/04/2004 அன்று முகமாலையிலிருந்து, முல்லைத்தீவுக்கு புறப்பட்ட பேருந்தில் தர்மபுரத்திற்கும் .புதுக்குடியிருப்புக்குமிடையில் தவராசா-சந்திரகுமாரி,தவராசா-குணசீலி ஊர்காவற்துறை என்னும் முகவரி இடப்பட்ட 4 அடையாள அட்டைகள் பெண்களுக்கான சிறுகைப்பை(பேஸ்) தவறவிடப்பட்டள்ளது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனை புதுக்குடியிருப்பிலோ, தமிழீழபோக்குவரத்துக்கழகம் புதுக்குடியிருப்பிலோ ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றனர். (7182)

### இடமாற்றம்

கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் இயங்கி வந்த வெண்ணிலா திரையரங்கம் 12/04/04 திங்கள் முதல் கரடிப்போக்கு கிளிநொச்சியில் இயங்க ஆரம்பித்துள்ளது என்பதை திரைப்படரசிகர்களுக்கு அறியத்தருகின்றோம். நேசன் உரிமையாளர். (9372)

### கட்டாக்காலிகளால் இடையூறு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சிப் பகுதியில் கட்டாக்காலி கால்நடைகளால் போக்குவரத்துக்களை மேற் கொள்பவர்கள் பல இன்னல்களைச் சந்தித்து வருகின்றனர். அத்தோடு கட்டாக்காலி நாய்களால் விபத்துக்கள் ஏற்பட்டு வருகின்றது!.

கால்நடைகள் இரவுவேளைகளில் வீதிகளில் படுத்து வருவதோடு பல கால்நடைகள் பிரதான வீதி உட்பட பலவீதிகளில் கும்பல்கும்பலாக நிற்கின்றன. அதனால் பிரயாணிகளுக்கு போக்குவரத்துக்களை மேற் கொள்ள இடையூராக உள்ளது. விபத் துக்களும் ஏற்பட ஏதுவாக உள் ளது.

இதேவேளைகட்டாக்காலி நாய்களால் அடிக்கடி உந்துருளி விபத்துக்கள் ஏற்பட்டுவருவதை அவதானிக்க முடிகிறது. (12)


சகல விதமான காகிதாதிகள், பாடசாலை உபகரணங்கள் நாளாந்த, வாராந்த சஞ்சிகைகள், இந்திய சஞ்சிகைகள் என்பன உடனுக்குடன் பெற்றுக்கொள்ள

**உயர்ச்சி பொத்தகசாலை**

அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்களைத்தெரிவிக்கின்றோம்.

துணுக்காய்சாலை,
மல்லாவி.

(சி-9358)

**நிலாவொளி புகைப்படக் கலையகம்**

**(துஷா ஸ்ருடியோ)**

நவீன தொழில்நுட்பத்துடன் கலர், கறுப்பு வெள்ளைப்படப்பிடிப்பு சேவை டிஜிரல் முறையிலான வீடியோ சேவை அவசர படப்பிடிப்பு, படங்கள் பெரிதாக்கல் என்பன தரமானமுறையில் குறித்த நாளில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்களைத்தெரிவிக்கின்றோம்.

துணுக்காய்சாலை,
மல்லாவி.

(சி-9357)

புத்தாண்டு வாழ்த்துக்கள்

**பொற்பரிதி நகைமாடம்**




துணுக்காய்சாலை,
மல்லாவி.

அசல் 22கரட் தங்க நகைகளை குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ள சிறந்த ஸ்தாபனம்

**பொற்பரிதி நகைமாடம்**

(சி-9355)


# 31ஆம் நாள் நினைவு அஞ்சலி



ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில்கொள்ளும் எங்கள் அன்புத் தெய்வமே!

இல்லத்தின் ஒளிவிளக்கே எங்கு சென்றீர்?
உமை நினைக்கையிலே நெஞ்சு வெடிக்குதையா
எண்ணிப்பார்க்கையிலே இதயம் குமுறிக் குழறுதையா
நொடிப்பொழுதில் ஓடி மறைவீரென்று எள்ளளவும் எண்ணவில்லை.
எமையெல்லாம் அழவிட்டு எங்குதான் சென்றீரோ
எப்படித்தான் தாங்குவமோ வாழும்வரை இப்புவியில்..

14.04.2004 (நாளை) எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது நினைவுக் கிரியைகளிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், போராளிகள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

## காசிநாதர் குமாரசாமி

**செல்லவாரிப்பிட்டி, கண்டாவளை.**

மலர்வு
05-11-1952

உதிர்வு
15-03-2004

(சி-9373)

குடும்பத்தினர்,
செல்லவாரிப்பிட்டி,
கண்டாவளை.

# அமெரிக்க கூட்டணிப் படையினர் மீதான தாக்குதல்களில் சன்னி - ஷியா பிரிவினரிடையே தந்திரோபாயத் தொடர்பு!

## -ஆதாரம் இருப்பதாக கொலின்பவல் தகவல்

**ஈராக்கில் அமெரிக்க கூட்டணிப் படையினருக்கு எதிராக போரிட்டு வரும் சன்னி மற்றும் ஷியா முஸ்லிம் பிரிவினரிடையே தந்திரோபாய ரீதியிலான தொடர்புகள் பேணப்பட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன இதனை அமெரிக்காவும் ஏற்றுக் கொண்டுள்ளது.**

அண்மை நாட்களாக ஈராக்கில் அமெரிக்க கூட்டணிப் படைகள் மீது கடுமையான தாக்குதல்களை நடத்தி வரும்,

சன்னி, ஷியா முஸ்லிம் பிரிவு தீவிரவாதிகள் சில பகுதிகளை தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ளமை தெரிந்ததே.


இந்நிலையில் இரு முஸ்லிம் பிரிவினரும் நீண்ட காலமாக பகைமை கொண்டுள்ளனர். பெரும்பான்மை சமூகமாக ஷியா பிரிவினர் இருந்த போதும் சதாம் ஆட்சிக் காலத்தில் சன்னி முஸ்லிம்களே ஆதிக்கம் மிக்கவர்களாக இருந்துள்ளனர்.

சதாமின் வீழ்ச்சிக்குப் பின்னரும் பகைமை உணர்வு தொடரும் நிலையில் அது தீவிரம் பெற்று வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்போதைய நிலையில் அமெரிக்க கூட்டணிப் படையினர் மீதான தாக்குதல்களில் இரு தரப்பும் ஈடுபட்டுள்ள அதேவேளை அவர்களுக்கிடையே தந்திரோபாயத் தொடர்புகள் இருப்பதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளதாக அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவல் தெரிவித்துள்ளார்.

அத்தோடு அமெரிக்கப் படையினர் கடுமையான நெருக்கடிகளை எதிர் கொண்டிருப்பதையும் அவர் ஒப்புக் கொண்டுள்ளார்.

அமெரிக்காவின் முக்கிய தொலைக் காட்சி நிறுவனங்களுடனான சந்திப்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில், ஈராக்கிய பெரும்பான்மையினை ஷியா முஸ்லிம்களது தென்பகுதியிலும் மத்திய ஈராக் நகரங்களான பலூஜா மற்றும் ரமடி ஆகிய இடங்களிலும் உருவாகிய மோதல்களது உக்கிரத்தையிட்டு தாம் மிகுந்த ஆச்சரியம் அடைந்ததாகவும் கூறியுள்ளார்.



பாக்தாத்தில் போராளிகளின் தாக்குதலுக் குள்ளான அமெரிக்க அப்ராம்ஸ் ரக டாங்கி தீப்பற்றி எரிகின்றது.



தெற்கு பலூஜாவில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள அமெரிக்க கடற்படையினருடன் வாக்குவாதப்படும் ஈராக்கியப் பெண்.



சிட்னியிலுள்ள பண்ணை 1987ம் ஆண்டு கைவிடப்பட்ட நிலையில் அங்கு பெருமளவு விலங்குகள் அநாதரவானது. தற்போது கடந்த 7ஆம் திகதி முதல் 10 ஏக்கர் நிலப்பரப்பில் பலவகையிலான வாழ்விடங்கள் அமைக்கப்பட்டு மக்களின் பார்வைக்கு விடப்பட்டுள்ளன. அங்கு வாழும் தீக்கோழியொன்று.

## பாக்தாத்தில் குண்டு வெடிப்பு!

பாக்தாத்தில் அமெரிக்க இராணுவ தலைமையகத்திற்கு அருகே நேற்று இரண்டு குண்டுகள் வெடித்துள்ளன.

குண்டு வெடிப்புக்கள் இடம் பெற்றதை அடுத்து இராணுவ தலைமையகத்திலிருந்து அபாய ஒலி எழுப்பப்பட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

# கொலம்பியாவில் தாக்குதல் பொதுமக்கள் ஐவர் பலி !

கொலம்பியாவில் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டின் போது பொதுமக்கள் 05 பேர் உயிரிழந்துள்ளனர்.

இராணுவத்தின் மாக்ஸிச போராளிகளெனக் கருதியே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இங்கு நடந்த மோதலொன்றில் பொலிசார் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. கொலம்பியா இராணுவத்திற்கும் மாக்ஸிச போராளிகளுக்குமிடையே 40 ஆண்டுகளுக்கு மேலாக மோதல்கள் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பலஸ்தீனத்தின் கிழக்குக் கரையை முற்றாகக் கைவிட இஸ்ரேல் மறுப்பு!

## -பலஸ்தீனத் தரப்பில் ஆட்சேபம்

இஸ்ரேலிய பிரதமர் ஏரியல்ஷரோன் தமது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கிழக்குக்கரையின் முழுமையான பகுதியை பலஸ்தீனர்களிடம் விட்டுக் கொடுக்க தயாராக இல்லையெனக் கூறியுள்ளார்.

இதேவேளை இப்பகுதி பலஸ்தீனர்களுக்கு உரியதெனவும், சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டுமானால் இவை எம்மிடம் கையளிக்கப்படவேண்டுமென பலஸ்தீனர்கள் கோரியுள்ளனர்.

இது இவ்வாறிருக்க அமெரிக்க சமாதானத் திட்டத்தின் கீழ் எதிர்கால பேச்சுவார்த்தைகளின் போது கிழக்கு கரையை முழுமையாக பலஸ்தீனர்களிடம் கையளிக்குமாறு இஸ்ரேல் மீது வற்புறுத்தல்கள் எதனையும் மேற்கொள்ளக் கூடாதென ஷரோன் அமெரிக்காவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது சம்பந்தமாக அமெரிக்கா இன்று வரை எதனையும் கூறவில்லை.

# மன்னராட்சிக்கு எதிராகஆர்ப்பாட்டம் நேபாளத்தில் ஆயிரம் பேர் கைது!

நேபாளத்தில் மன்னருக்கெதிராக ஆர்ப்பாட்டத்திலீடுப்பட்ட 1000பேரை பொலிசார் கைது செய்துள்ளனர். நாட்டில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதற்கு நேபாள அரசாங்கம் தடைச் சட்டமொன்றை கடந்த வியாழக் கிழமை கொண்டுவந்துள்ளது.

இந்தத் தடைச்சட்டத்தை மீறும் வகையில் கடந்த வெள்ளிக்கிழமை தலைநகர் காத்மண்டுவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். 25,000 பேர் அரசுக்கு எதிராக திரண்டதாகவும் மேலும் 10,000 பேர் கூட்டத்துடன் இணைந்துள்ளதாக கூறியதைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆயிரக்கணக்கானோரை பொலிசார் சுற்றி வளைத்தனர் ஆர்ப்பாட்டக்காரர்கள் பலர் பொலிசாரினால் தாக்கப்பட்டனர். ஏனையோர் தப்பியோட 1000 பேரை பொலிசார் கைது செய்துள்ளனர்.

அரசாங்கத்தின் தடைச்சட்டத்தை மீறியவர்கள் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ் ஆர்ப்பாட்டத்தை பிரதான கட்சிகளான நேபாள காங்கிரஸ், ஐக்கியமாக்ஸிஸ லெனின் கம்யூனிஸ்ட்கட்சி ஆகியன ஏற்பாடு செய்திருந்தன கடந்த ஆண்டு முதல் மன்னர் அரசாங்கத்தின் நிர்வாக அதிகாரங்களில் தலையிட்டு பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்திவருவதாக ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். இதேவேளை மன்னராட்சியை முடிவுக்கு கொண்டுவரக் கோரி மாவோ தீவிரவாதிகள் நாட்டில் வன்முறை களில் ஈடுபட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.




பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் அமெரிக்காவுக்கெதிராக ஆர்ப்பாட்டம் நடத்துவோரால் அமெரிக்கத் தேசியக்கொடி எரிக்கப்படுகிறது.

# இந்துத்துவம் என்பதைக் கைவிட்டு இந்தியம் என்பதையே விரும்புகிறேன்

## -பிரதமர் வாஜ்பாய் கூறுகின்றார்

(புதுடில்லி)

"இந்துத்துவம்" என்பதைவிட இந்தியம், அல்லது பாரதியம் என்பதையே நான் விரும்புகிறேனென பிரதமர் வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

இந்துத்துவமும் பாரதியமும் ஒன்று தான் என்கின்ற போதிலும் பாரதியம் என்பதே எனது விருப்பமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் சிக்கல்கள் நிறைந்துள்ள இந்தியாவில் நிதானமாக செயற்பட வேண்டியது மிக முக்கியமானதென அவர் வலியுறுத்தியுள்ளார்.

அயோத்தி பிரச்சினையை பற்றி அவர் கருத்து தெரிவிக்கையில், இராமர் ஆலயம் என்பது தேசிய சனநாயக் கூட்டணியின் தேர்தல் பிரச்சார பிரச்சினை அல்ல. இப் பிரச்சினைக்கு நீதிமன்ற தீர்ப்பு அல்லது பேச்சு வார்த்தை என்ற இரண்டு வரிகளில் தான் தீர்க்க இயலுமெனத் தெரிவித்துள்ளார்.

டில்லியில் பத்திரிகை ஒன்றிற்கு பேட்டியளிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

# காங்கிரஸ் ஆட்சியமைத்தால் தமிழக அரசைக் கலைப்போம்

## பா.ம.க. அறிவிப்பு

(சென்னை)

எதிர்வரும் மக்களவைத், தேர்தலுக்குப்பின்னர் காங்கிரஸ்கட்சி ஆட்சியமைக்குமானால் அரசியல் சாசனத்தில் 356 பிரிவைப் பயன்படுத்தி தமிழக அரசை கலைக்கவேண்டுமென சோனியாவை தாம் கேட்போமென பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப் பேரவைக்கு, இன்னும் மூன்று மாதங்களுக்குள் தேர்தல் வருமெனவும் எனவே இத் தேர்தல் தமிழகத்தில் ஆட்சி மாற்றத்திற்கு வழிவகுக்குமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையிலே அவர் இதனைத், தெரிவித்துள்ளார்.




# சிறப்புற நடைபெற்ற கரைச்சிப் பிரதேச வி.போட்டி

கிளிநொச்சி மாவட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக் கிடையிலான விளையாட்டுப் போட்டி களின் இறுதிப்போட்டியாக கரைச்சிப் பிரதேச பதிவுசெய்யப்பட்ட கழகங் களுக்கு இடையிலான விளையாட் டுப்போட்டிகள் கடந்த புதன்கிழமை கிளிநொச்சி கனகபுரம் மைதானத்தில் சிறந்த முறையில் நடைபெற்று முடிந்ததைக் காணமுடிந்தது.

வருடாவருடம் நடைபெறும் இப்போட்டியில் பெருவிளையாட் டுக்கள், மெய்வல்லுநர் திறனாய்வு போன்றன நடைபெறுவது வழமை. இதன்போது அதிக புள்ளிகளைப் பெற்று முதலிடம் பெறும் விளையாட் டுக் கழகங்களுக்கு வெற்றிக்கிண் ணங்கள் வழங்கப்பட்டுக் கௌரவிப் பதும் வழமை.

அந்த வகையில் கடந்த நான்கு ஆண்டு காலமாக அதி கூடிய புள்ளி களையும் மெய்வல் லுனர் நிகழ்வு களில் சிறந்த பெறு பேறுகளையும் பெறும் கழகமாக வட்டக்கச்சி லக் கிஸ்ரார் வி.கழகமும், இளந்தென்றல் உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழ கமும் முன்னிலையில் திகழ்ந்தன.

இருப்பினும் அஸ்தமன வாழ்க் கைக்குப்பின் மீண்டுமொருமுறை உருத்திரபுரம் விளையாட்டுக்கழகம தனது பெயரை இம்முறை அதிக புள்ளிகளைப் பெற்று முன்னணிக் கழகமாக இனம் காட்டியுள்ளதைக் காண முடிந்தது.

மேலும் இப்போட்டிகளில் பெண்கள் தரப்பில் கலந்து கொண்ட வர்களில் கூடுதலானோர் பாடசாலை மாணவிகளாகவும், எதிர்காலத்தில் நல்ல நிலையில் தம்மை நிலை நாட்டக்கூடியவர்க ளாக வும் திக ழ்ந்தமையை காணக்கூடியதாக இருந்தது.


கைலாகு கொடுக்கும் வீரர்களும், முக்கியஸ்தர்களும்.

இருப்பினும் இம்முறைநடை பெற்ற மெய்வல் லுநர் போட்டி களில் ஆண் களும் பெண் களும் தமக்கு ரிய சீருடைகளுடனும், உபகரண பயன்பாடுகளிலும் அதிக கவனம் செலுத்தவில்லை.

மேலும் வளர்ச்சியடைந்துவரும் விளையாட்டின் போக்கில் எதிர்வரும் விளையாட்டுப் போட்டிகளில் தடை ஓட்டம் போன்ற விளையாட்டுக்களும் புதிதாக சேர்க்கப்படும் என எதிர்பார்க் கப்படுகிறது.

அத்துடன் இம்முறை மாவட்ட ரீதியான பட்மின்ரன் (பூப்பந்து) போட்டி அறிமுகப்படுத்தப்பட்ட போது அதில் கலந்துகொள்ள அனேக வீரர்கள் ஆர்வம் காட்டிய போதும் வாயுபகவான் ஆடுகளத்தில் ஆதிக் கம் செலுத்தியதால் வீரர்கள் போட்டி யில் திருப்தியுடன் கலந்துகொள்ள முடியவில்லை.

மேலும் மெய்வல்லுநர் இறுதிநாள் நிகழ்வில் நடைபெற்ற ஒரு கொடியில் பூத்த இரு அணிகளின் மோதல் பார்வை யாளர்களைப் பரவசப்படுத்தியது.

நீண்ட கால வரலாறாக தொடர்ந்து வரும் இரு அணிகளின் மோதல்க ளும் வெற்றி தோல்விஇன்றி முடிவு பெறுவதையும் தண்டஉதையில் உழவர் ஒன்றிய அணி வெற்றி பெறுவதையும் காண முடிகின்றது. இது நிரந்தரமான முடிவாக இத்துடன் நான்கு போட்டிகளில் அவதானிக்க முடிந்துள்ளது.

இருப்பினும் ஒரே இடத்தைச் சேர்ந்த இரு அணிகள் என்ற ரீதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியதாகக் காணப்பட்டது. உதைபந்தாட்டத்தைப் பொறுத்தமட்டில் மன உறுதியும் தொடர் பயிற்சியும் முக்கியமான தொன்றாகும். ஆனால் இந்த இரு அணிகளுக்கிடையேயும் பயிற்சி காணப்பட்டதாகத் தெரியவில்லை. இரண்டும் இணைந்து காணப்பட்டால் இவை தமது திறமைகளை பன்மடங் காக்க முடியும் என்பது பார்வையா ளர்களினதும் விளையாட்டு சார்ந்தோ ரினதும் அங்கலாய்ப்பாகும்.

மேலும் மெய்வல்லுநர் ரீதியில் தனித் திறமைவாய்ந்த கழக உறுப்பினர்களை வெளிப்படுத்தும் ஒரேயொரு போட்டியாக உதவி அரச அதிபர் பிரிவின் கீழான இவ் விளை யாட்டுப்போட்டி மட்டும் நடைபெறு வதால் நிச்சயமாக இதில் அனைத் துக் கழகங்களும் தம்மிடையே ஒளிந் திருக்கும் திறமைகளை வெளிப் படுத்தி மாவட்ட, மாகாணப் போட்டி களில் பிரதிநிதித்துவப்படுத்தி நல்ல தேர் வீர்களை உருவாக்கும் பணியை பொறுப்புணர்வுடன் சம்பந்தப்பட்டவர் கள் தங்களின் கையில் எடுக்கவேண் டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

# டெஸ்ட் தொடர் யாருக்கு? இருஅணிகளும் இன்று களத்தில்

இன்று பாகிஸ்தானின் ராவல்பிண்டியில் ஆரம்பமாகும் இந்திய-பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகளுக்கு இடையேயான 3வதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி பெரும் பரபரப்பை ஏற்படுத்தும் என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்கமுடியாது.

நடந்து முடிந்த ஐந்து ஒருநாள் போட்டிகளும் ஆரம்பம் முதலே பரபரப்பான போட்டிகளாக இருந்ததோடு, 2-2 என்ற நிலையில் இறுதிப் போட்டி நடந்ததினால் வெற்றிபெற்றால் தொடருக்கான வெற்றி என்ற நிலையில் இறுதிப் போட்டியும் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியது. எனினும் இந்திய அணியின் விடா முயற்சியால் ஒருநாள் போட்டித் தொடர் இந்தியா வசமாயிற்று. அவ்வெற்றி இந்திய அணி பாகிஸ் தான் மண்ணில் பெற்ற முதலாவது வெற்றியாகும்.


கங்குலியுடன் ராவிட்

இவ்வொருநாள் தொடரில் தோல்வியைச் சந்தித்துள்ள பாகிஸ்தான் அணி 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை எப்படி யாவது தாம் கைப்பற்ற கங்கணம் கட்டியிருக்கும் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. ஆயினும் அவ்வணியில் சிறந்த பந்து வீச்சாளர்கள் துடுப்பாட்ட வீரர்கள் இருந்தும் முதலாவது போட்டியில் இனிங்ஸ் தோல்வியை தவிர்க்க முடியாமல் போய் விட்டது. இதனை நன்குணர்ந்த பாகிஸ்தான் வீரர்கள் 2வது போட்டியில் குறிப்பாக பந்து வீச்சாளர்கள் மிக அவதானமாக செயற்பட்டதால் இந்திய அணியை 9விக்கெட் வித்தியாசத்தில் வென்று சற்று ஆறுதல டைந்திருப்பதுடன் அதே வேகத்தில் 3வது போட்டியிலும் தமது திறமை களை வெளிப்படுத்தி தொடரைக் கைப்பற்றும் முனைப்பில் இன்று களம் இறங்கவுள்ளது.

இதேவேளை முதலாவது போட்டியில் இனிங்ஸ் வெற்றியைப் பெற்ற இந்திய அணியும் 2வது போட்டியில் இனிங்ஸ் தோல்வியைத் தழுவும் நிலையை அண்மித்து இளம் வீரர் பாத்திவ்பட்டேலும் அகர்கரும் இதனைத் தவிர்த்து தமது அணியின் கௌரவத்தை தற்காத்துக்கொண்டனர். அப்போட்டியில் பாகிஸ்தா னின் இளம்பந்து வீச்சாளர் உமர்குல் பாகிஸ்தானிய அணிக்கு வெற்றி பெற்றுத்தர பெரிதும் பங்காற்றினார். இது இவ்வாறிருக்க நடைபெறவுள்ள போட்டி இரு அணிகளுக்கும் இடையிலான ஐம்பதாவது போட்டியாக அமைந்துள்ளதால் எவ்வாறாயினும் வெனறு சாதனையுடன் நாடு திரும்புவதும் இந்திய அணியின் எதிர்பார்ப்பாகும்.


இன்சமாம்

எது எவ்வாறிருப்பினும் கடந்த போட்டிகளில் ஏற்பட்ட சிறு கசப் புணர்வுகள் இப்போட்டியில் தலை தூக்காமல் வெற்றி தோல்வியைச் சமமாக மதித்து இப்போட்டித் தொடரை நிறைவுசெய்வது இரு அணிகளினதும் பொறுப்பாகும். காரணம் இப் போட்டிகளைக் கண்டு களிக்கும் ஆவலில் இருநாட்டு எல்லைகளிலுமி ருந்து பல ஆயிரம் ரசிகர்கள் கால் நடையாக வந்து போட்டிகளைக் கண்டு ரசிப்பதால் அவர்களின் எதிர்பார்ப்புகள் சிதறி விடக்கூடாது என்பதுடன் மேலும் பல போட்டிகளில் பங்குபற்றி இரு அணிகளும் ஆசியக் கண்டத்தின் இரு கண்கள் போல விளங்க வேண்டும் என்பதே கிரிக்கெட் ரசிகர்கள் அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

□ □ □

வடிவேல்

# சாதனை படைப்பாரா லாறா?

ஒருகாலத்தில் அசைக்கமுடியாத அணியாக உலகை வலம் வந்த மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் அணி தொடர் தோல்விகளால் மீள முடியாதுள்ளதுடன் பல தரப்பட்டவர்களின் விமர்சனங்களுக்கும் உள்ளாகியுள்ளது.

இதனால் அணியை வழிநடத்தும் அணித்தலைவர் பிறைன்லாறாவின் எதிர்காலம் கேள்விக்குறியான நிலையில் அணியில் இடம்பெற்றுள்ள ஏனைய வீரர்களின் எதிர்காலமும் கேள்விக்குறியானது..

டெஸ்ட் போட்டிகளில் தொடர்ச்சியான தோல்விகளைச் சந்தித்த மேற்கிந்தியத்தீவுகள் அணி அத்தோல்விகளைத் தமது சொந்த மண்ணில் இங்கிலாந்து அணியை வெற்றிகொள்வதன் மூலம் ஈடுசெய்யும் என எதிர்பார்த்திருந்த அந்நாட்டு ரசிகர்களுக்குக் கிடைத்தது ஏமாற்றமே. தொடர்ச்சியாக மூன்று போட்டிகளில் மோசமான தோல்வியைச் சந்தித்த மேற்கிந்தியத் தீவு தொடரையும் இழந்தது. இது இங்கிலாந்து அணிக்கு வரலாற்று வெற்றியாக அமைந்ததுடன் 1968ஆம் ஆண்டுக்குப் பின்னர் இங்கிலாந்து அணி மேற்கிந்தியதீவு அணியை அதன் சொந்த மண்ணில் வீழ்த்திச் சாதனை படைத்தது.

இதனால் முன்னணி வீரர்களைத் திட்டித் தீர்த்த மேற்கிந்தியத்தீவுப் பத்திரிகைகள் மேற்கிந்தியத்தீவு. கிரிக்கெட் இறந்துவிட்டதாகவும் வர்ணித்தன.

இதனால் நெருக்கடிக்குள்ளான நிலையில் மேற்கிந்திய வீரர்கள் சாதிக்கப் போவது என்ன? குறிப்பாக லாறா என்ன செய்யப்போகிறார் என்ற கருத்தையும் முன்வைத்தன.

## வலுவான நிலையில் மே.தீவு

இந்நிலையில் இங்கிலாந்துக்கு எதிரான நான்காவதும் இறுதியுமான போட்டியில் மேற்கிந்தியத்தீவு வலுவான நிலையை எட்டியுள்ளதுடன் ஆச்சரியப்படும் வகையில் அவர்களின் துடுப்பாட்டம் அமைந்துள்ளது. குறிப்பாக அணித்தலைவர் பிறைன்லாறா இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவின் போது 313 ஓட்டங்களைப் பெற்று உலக சாதனையை நோக்கி முன்னேறும் நிலையில் இருந்தார்.

இங்கிலாந்து அணிக்கு எதிராக அண்டிகுவா சென் ஜோன் சில் நடைபெற்று வரும் நான்காவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் இரண்டாம் நாள் ஆட்டமுடிவின் போது மேற்கிந்திய தீவுகள் அணி பெற்ற 5 விக்கெட் இழப்பிற்கு 595 என்ற மொத்த ஓட்டப் பெறுதியில் லாறா ஆட்டம் இழக்காது 313 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

இதே அண்டிகுவா, மைதானத்தில் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் இங்கிலாந்து அணிக்கு எதிராக 375 ஓட்டங்களைப் பெற்று உலக சாதனை படைத்திருந்தார். இச்சாதனை கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் அவுஸ் திரேலியாவின் ஆரம்பதுடுப்பாட்ட வீரர் மத்தியூ ஹெய்டன் முறியடித்திருந்தார்.

இப்போது மீண்டும் ஒருதடவை தனது சாதனையை மீள் நிறுத்துவதற்கான வாய்ப்பு லாறாவுக்கு கிடைத்ததுள்ளது. ஹெய்டனின் உலக சாதனையை முறியடிப்பதற்கு லாறாவுக்கு 68 ஓட்டங்கள் தேவையாக இருந்தது.

இங்கிலாந்து அணிக்கு எதிராக இந்தத் தொடர் ஆரம்பிப்பதற்கு முன்னர் 400 ஓட்டங்களை ஒரு இனிங்சில் பெற்ற முதல் டெஸ்ட் வீரர் என்ற பெருமையைப் பெற விருப்பம் வெளியிட்டிருந்தலாறாவுக்கு அந்த இலக்கை அடைய இன்னும் 87 ஓட்டங்கள் தேவையாக இருந்தது.


லாறா

அத்துடன் உலகடெஸ்ட் வரலாற்றில் முன்னாள் அவுஸ்திரேலிய வீரர் சேர் டொனால்ட் பிரட்மனுக்கு அடுத்த படியாக இரண்டு முச்சதங்களை பெற்ற வீரர் என்ற பெருமையையும் லாறா பெற்றுள்ளார்.

ஏற்கனவே இங்கிலாந் தொடரை திடம் 3-0 என்ற ரீதி யில் இழந்திருக்கும் மேற்கிந் திய தீவுகள் அணிக்கு பிறைன்லாறா பெற்றுக் கொண்ட இம் முச்சதமானது தனது பெருமையை ஓரளவுக்கு மீளப் பெற்றுக்கொள்ள வாய்ப்பை வழங்கியுள்ளது.

லாறாவின் விருப்பப்படி நேற்றைய மதியபோசன இடைவேளைக்கு முன்னரே 700 ஓட்டங்களைப் பெற்றால் தான் 400 ஓட்டங்களை பெறுவதற்கு முன்னர் இந்த இனிங்சை இடைநிறுத்தும் வாய்ப்பு ஏற்படும் என்பதை லாறா தெரிவித்திருந்தார்.

தனது தனிப்பட்ட சாதனையை விட மேற்கிந்தியதீவு பெறக்கூடிய வெற்றியே தனக்கு முதன்மையானது என லாறா தெரிவித்துள்ளார்.

. ஆனாலும் 400 ஓட்டங்களை பெறுவது தனது அணியின் விருப்பமாக இருந்தால் தான் அதனை பெற்றுக்கொள்ள வேகமாக ஓட்டங்களைப் பெறவிளைவதாக தெரிவித்துள்ள லாறாசாதனை படைக்க வாழ்த்துக்கள்.

□



# சித்திரைப்புத்தாண்டு சிறப்பிதழ்




# தரணியெங்கும் தமிழ்மணம் கமழும் தாரண வருடப்புத்தாண்டே வருக! வருக!

இப் புதிய வருடம் தாரண வருடம் எனப் பெயர் சூடி சித்திரைமாதம் 1ம் நாள் (13.04.2004) செவ்வாய்க் கிழமை பிற்பகல் (மணி 4.05)ல் உதயமாகின்றது.

காலம் எவருக்காகவும் காத்திருப்பதில்லை. காலச்சக் கரம் சுழல்கின்றது. நாட்கள் வாரங்களாக,வாரங்கள் மாதங் களாக,மாதங்கள் வருடங்க ளாக உருண்டோடிக் கொண்டி ருக்கின்றது. எண்ணம் நம் பிக்கை, கனவு,எதிர்பார்ப்பு என் பவற்றை ஏராளமாகச் சுமந்து கொண்டு பிறக்கும் ஒவ்வொரு வருடத்தையும் நாம் நம்பிக் கையுடன் எதிர் நோக்குகின் றோம். இதே நம்பிக்கையுடன் தான் நாம் அனைவரும் புத்தாண்டை வர வேற்கின் றோம். பழைய (சுபானுவரு டம்) விடைபெற்றுச் செல்ல, புதிய (தாரண) வருட சித்தி ரைப் புத்தாண்டு உதயமா கின்றது.

இது இலங்கையில் தமிழ், சிங்களம் என இருவேறு சமூகத்தினரால் கொண்டாடப் பட்டுவரும் மிக விசேடமான திருநாள் ஆகும்.

இந்துக்களும்,பௌத்தர்களும் இன்றைய தினம் மிகப் பழமையான மரபுக ளைப் பின்பற்றி சித் திரைப்புத்தாண்டைக் கொண்டாடுவர்.



பழைய வருடத்தில் நாம் தெரிந்தோ, தெரியாமலோ செய்த தவறுக்காக பிராயச்சித் தமாகவும், உடல் உஷ்ணம் குறைந்து குளிர்ச்சி ஏற்படவும்,மருத்துநீர் தேய்த்து ஸ்ஞானம் செய்து கொள்வது தொன்று தொட்டவழமை.

நடந்தவை நடந்தவை யாகவே இருக்கட்டும். இனி நடப்பவை நல்லவை யாக அமையட்டும். பழையன கழிதலும், புதியன புகுதலும் இயற்கை. நம்மிடையே காணப் பட்ட தீய பழக்கங்களுக்கும், தீய குணங்களுக்கும் முற்றுப்புள்ளி வைத்து பிறக்கும் புதிய வருடத் திலாவது புதிய மனிதனாக வாழ திடசங்கற்பம் பூணுவோம்.

இதுவரை காலமும் தமிழ் மக்கள் முகம் கொடுத்து வந்த இடர்பாடுகள் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. நமது நாட்டில் சகல மக்களும், நிம்மதியாகவும் மகிழ்ச் சியாகவும் வாழ இப்புதிய ஆண்டு வழி சமைக்கும் என்ற நம்பிக்கை அனைத்து மக்க ளிடம் வேரூன்றி நிற்கிறது.

ஒரு கிணறு வெட்டுவதிலும் பார்க்க மகிழ்வு ஒரு குளம் வெட்டுவதாகும் உண்மை யான மகிழ்வு. நாம் எவ்வளவு பொருள் ஈட்டுகின்றோம் என் பதில் இல்லை. நாம் ஈட்டிய பொருளில் எவ்வளவு தர்மம் செய்கிறோம் என்பதில் தான் தங்கி இருக்கிறது.

பேசுவதை விட மௌனமே சிறந்தது. பேசித்தான் ஓர் காரியம் தீர வேண்டுமாயின், அந்தப் பேச்சு உண்மையாய், நேர்மையாய், இனிமையாய் அமையவேண்டும்.

வாழ்வில் முன்னேற்றம் அடைய சிந்தனை அவசியம். வெறும் சிந்தனை மட்டும் போதாது சிந்தனையைச் செயல் வடிவமாக மாற்ற வேண்டும். மனநிறைவுடன் தொடங்கியிருக்கும், இப் புதிய ஆண்டு நமது நாட்டின் நீண்ட கால அவலநிலை முற்றாக ஒழிக் கப்படும் ஆண்டாக மலர வேண்டுமெனப் பிராத்திக் கிறேன்.

●

சிவஸ்ரீ
கு.இரத்தினேஸ்வரக்குருக்கள்
பிரதம சிவாச்சாரியார்,
முருகன் தேவஸ்தானம்,
கிளிநொச்சி.

மங்களம் பொங்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்!



அசல் 22கரட் தங்க நகைகளை
கைதேர்ந்த தொழில்வல்லுநர்களால்
மனதைக்கவர்ந்த வடிவங்களில் செய்து பெற்றுக்கொள்ள
சுமங்கலி
நகைப்பூங்கா
முதன்மைச்சாலை, கிளிநொச்சி. (சி-9526)

அனைவருக்கும் எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!
பம்பலப்பிட்டியில்...
Vishan's
COLOURLAB
COLOURLAB
OF THE YEAR



Awarded to
Vishan's Colour Lab(Pvt) Ltd
for being the most valued
Fujifilm customer of the year
31st may 2003

தற்பொழுது புதிய கட்டடத்தில் இயங்கி வருகிறது.
இந்நிறுவனம் கடந்த 5 வருடங்களாக சிறப்பான சேவையின் மூலம் வளர்ச்சி அடைந்துள்ளது.



விஷான்ஸ் கலர் லாப்
மிகப்பெரியதும் நவீன வசதிகளைக்கொண்ட படம் பிரதிபண்ணும் தொழிற்கூடமும், படப்பிடிப்பு நிலையமும் கொண்டது.
எமது சேவைகள்:
- Studio படப்பிடிப்புக்கள், டிஜிட்டல் படப்பிரதி பண்ணுதல்
அதிநவீனமான Studio வசதிகள்
- லேசர்(Laser)தொழில்நுட்ப படம் பிரதிபண்ணுதல்.
- பழைய படங்களைப்புதுப்பித்தல்.

வன்னி-யாழ்ப்பாணத்திற்கான உத்தரவு பெற்ற முகவர்.
M.S
அம்பனைச்சந்தி, தெல்லிப்பளை.
(மட்டுவில்)
எமது சேவைகள்:
- சிதைந்த படங்களை புதிதாகஅமைத்தல்.
- பாஸ்போட்,சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் விசா போன்றவற்றுக்கு 15 நிமிடங்களில் படம் பெறுதல்.
(4431)
இல. 182, காலி வீதி, கொழும்பு-04. தொ.பே.-4518451


மீண்டும் வன்னியில் புதுப்பொலிவுடன்
உங்கள் இன்றைய தெரிவுக்கு
குமரகுரு
புடைவை அழகுப்பொருள் வாணிபம்
அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்!
இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதி நவீன ஆடைகளை
உள்ளடக்கிய திருமணம் மற்றும் மங்கள நிகழ்வுகளுக்கான காஞ்சிபுரம் சாறிகள்
பட்டுசாறிகள் பட்டுவேட்டிகள் மற்றும் சல்வார் சோலிகிற் சூட் கவுண்
சேட் சூட்டிங் மற்றும் பெரியோர்கள் சிறியோர்களுக்கான ஆடைகளை மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்
குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபம்
KUMARAKURU
Textile & Fancy House
யாழ்சாலை, கிளிநொச்சி
Yarl Road, Kilinochchi.
(சி-9286)


நங்கையர் விரும்பும் நவீன டிசைன் நகைகளை
அசல் 22 கரட்டில் அழகாக வடிவமைத்து
உங்களுக்கு தருபவர்கள்!
எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
சித்திரைப்புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.
சிவா கோல்ட் ஹவுஸ்
இல:- 56, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
T.P:- 024 - 2223034
(சி-9522)


எமது வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
இனிய புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்!
சிவகுரு கட்டடப்பொருள் உந்துருளி வாணிபம்
வன்னிப்பெருநிலப்பரப்பில்
அனைத்து வகை மோட்டார் சைக்கிள்களின் காட்சியறை.
றெயினோ கூரைத்தகடுகள், கூரைத்தகரம், கல்வனைஸ்
குழாய்கள், இரும்புக்கம்பிகள், பட்டங்கள், சகலவிதமான கட்டடப்
பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும்
நியாயவிலையில்பெற்றுக்கொள்ள நாடவேண்டிய சிறந்த இடம்.
சிவகுரு கட்டடப்பொருள் உந்துருளி வாணிபம்
HERO HONDA
World No. 1
Sivaguru
Hardware & Motor Cycle Sales Centre (Pvt) Ltd.
Authorised Dealer
உந்துருளி விற்பனையில் முன்னணி வகிக்கும் நிறுவனம்
நாயகி கட்டடம்,
பரந்தன் சந்தி அருகாமை,
யாழ்சாலை, கிளிநொச்சி.
வன்னிப்பகுதிக்கான
அங்கீகரிக்கப்பட்ட முகவர்
2 Year Warranty
(சி-9523)


எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தாரண
சித்திரைப்புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!
அசல் 22 கரட் தங்க நகைகளை குறித்த
தவணையில் செய்து பெற்றுக்கொள்ளஇன்றே நாடுங்கள்
மணி ஐயப்பா நகைமாடம்
யாழ்சாலை, கிளிநொச்சி
(ஈழநாதம் பணிமனை முன்பாக)
(சி-9524)



அனைவருக்கும் எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

SRM

# சிவனருட்செல்வன் அரிசி ஆலை

# SIVANARUDSELVAN RICE MILL

வன்னிப்பெருநிலப்பரப்பில்
100 வீதம் கல்,மண் நீக்கப்பட்ட
தரமான அரிசி வகைகளை விநியோகிப்பவர்கள்

தரம், சுவை மிக்க அரிசியினை
பாதுகாப்பான 50kg, 10kg பொதிகளில்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

எமது அதி சிறந்த உற்பத்திகள்

No.1-சிவப்பு நாடு
No.1-சிவப்பு பச்சை
No.1-சிவப்பு உடையல்

## சிவனருட்செல்வன் அரிசி ஆலை

உருத்திரபுரம் வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி.

சம்மந்தன் அரிசி ஆலை
இல. 93, ஸ்கந்தபுரம். (சி-9525)




STM Group

# கலைவாணி அச்சகம்

துணுக்காய்சாலை, மல்லாவி

ஓவ்செற் பிறிண்டிங் (நேர்அச்சு)
ஸ்கீறின் பிறிண்டிங் (திரைஅச்சு)
புத்தகம் கட்டுதல்

புதுவருட நல்வாழ்த்துக்கள்!

போன்ற வேலைகள் எம்மால் குறித்த
நேரத்தில் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும். (சி-9359)

எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!
நவீன தொழில்நுட்பத்துடன் கலர் கறுப்பு வெள்ளைப்படப்பிடிப்புக்கள்
அவசர படப்பிடிப்புக்கள், படங்கள் பெரிதாக்கல் டிஜிற்றல் முறையிலான வீடியோ
படப்பிடிப்புக்கள் என்பன தரமான முறையில் குறித்த நாளில்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

# எழிலருவி புகைப்படக்கலையகம்

வண்ணன் விளையாட்டுக்கழகம் முன்பாக மல்லாவி யோகபுரம். (சி-9356)

அனைவருக்கும் எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

எங்களிடம் NATURAL பிறவுன் கலர், அலுமினிய பார்கள், ஒட்டுப்பலகை, M.D.F
வெள்ளை போட், சிப்போட், சீலிங்சீற் வகை, தரைவிரிப்புக்கள், ரெக்சின், வெல்பட் துணி,
ஜன்னல், மேசைக்கண்ணாடி, பிளைவுட் கதவு, பிளாஸ்டிக் கதவு, பிளாஸ்டிக்
கலர்க்கண்ணாடிகள், அனைத்து வகையானபூட்டுக்கள், கைப்பிடிகள், ஹாட்வெயார்
சமான்கள் மற்றும் அனைத்து வகையான அலுமினிய பிற்றிங் வேலைகளும் செய்துகொள்ள நாடுங்கள்.

# விநாயகா ரேட் சென்ரர்

# VINAYAGA TRADE CENTRE

T.P: 0712 35556 No.102, First Floor, New Bus Stand Complex Vavuniya. (சி-9368)

எமது வழமையாளர்கள் அனைவருக்கும் சித்திரைப்புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

# இளவேனில் வாணிபம்

உங்களுக்குத் தேவையான சகல வகையான கட்டட நிர்மாணப்பொருட்கள், மின் உபகரணங்கள்
மோட்டார் வாகன உந்துருளி ஈருருளி உதிரிப்பாகங்கள், உழவுஇயந்திர உதிரிகள், எரிபொருள் உராய்வு நீக்கிகள்
என்பவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்

MITSUI CEMENT — ரோக்கியோ சீமெந்து கம்பனியினரின் சீமெந்து வகைகள்

ANTON — அன்ரன் பி.வி.சி உற்பத்திப்பொருட்கள்

RHINO — றைனோ கூரைத்தகடுகள்

CALTEX — கல்ரக்ஸ் உராய்வு நீக்கிகள்

METROOF Total Roofing Solutions — மற்றூவ் நாகம் பூசப்பட்ட கூரைத்தகடுகள்

HERO HONDA — ஹீரோ ஹொண்டா மோட்டார் சைக்கிள்கள், உதிரிகள்

TVS — T.V.S மோட்டார் சைக்கிள் உதிரிகள்

விக்டோரியா வில்லுத்தகடுகள்

என்பவற்றை நீங்கள் தென்பகுதி சென்று பெற்றுக்கொள்ளும் நேரத்தையும் செலவையும் மீதப்படுத்தி எம்மிடம் நியாயவிலையில் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் தேவையறிந்து சேவையாற்ற வன்னியெங்கும்

## இளவேனில் வாணிபம்

* கிளிநொச்சி
* கந்தபுரம்
* வட்டக்கச்சி
* பளை
* தருமபுரம்
* மல்லாவி
* துணுக்காய்
* நாச்சிக்குடா
* இலுப்பக்கடவை
* ஆண்டாங்குளம்
* புதுக்குடியிருப்பு
* முல்லைத்தீவு
* தண்ணீருற்று
* கலியுகவரதன் வாணிபம் (புதுக்குடியிருப்பு)

(சி-9527)



வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
எமது புத்தாண்டு
வாழ்த்துக்கள்!
லிமற்
கணினி
இலத்திரனியல்
மையம்
பொருள் விற்பனை
திருத்த வேலை
மின்னஞ்சல் - (E-mail)
இணையம் - (Internet)
தொலைத்தொடர்பு - (Communication)
கணினி விளையாட்டுக்கள் - (Computer Games)
வர்ண, கறுப்பு வெள்ளை நிழற்படிகள்
லமினேற்றிங்
ஆகிய தேவைகளை சேவையாகக்கொண்டு அவுஸ்திரேலியாவின் லிமற் ஆதரவுடன் வன்னியில் உதயமாகியுள்ளது.
குறைந்த பணச்செலவு
நிறைந்தமனமகிழ்வு
Special
Offer
Computer
Low Price Items(CD,Flash,Floppy)
அவுஸ்திரேலியாவின்
லிமற்
வன்னியில்...
இல:05 யாழ்சாலை, கிளிநொச்சி.
(கச்சேரி அருகாமை)
(சி-9289)


எமது புதுவருட வாழ்த்துக்கள் அனைவருக்கும் உரித்தாகட்டும்...
டாக்டர்.பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனை
யாழ்சாலை, கிளிநொச்சி.
இரணைப்பாலை வீதி, புதுக்குடியிருப்பு.
24 மணிநேர சேவை
X-RAY/SCANNING/ECG
சத்திரசிகிச்சைப்பிரிவு
உள்நோயாளர் பிரிவு
நவீன ஆய்வுகூட வசதி
பற்சிகிச்சைப்பிரிவு
கண் சிகிச்சைப்பிரிவு
வெளிநோயாளர் பிரிவு
விரைவில்.... HORMONES(ELISA)
பரிசோதனைகளும் ஆரம்பிக்கவுள்ளோம்.


பொற்காலம் வண்ணக்கலையகம்
அனைவருக்கும் எங்கள் புதுவருட வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்
Millennium Colour Lab
Audio, Video, Studio & Digital Colour Lab
புகைப்படச்சுருள் பிரதியாக்கும்
சித்திரை முதல் நாம் வடக்கில் முத்திரை பதிக்கிறோம்
உட்புறவெளிப்புற புகைப்பட, வீடியோ படப்பிடிப்புகள்.
டிஜிற்றல் அல்பம் தயாரித்தல்
கணனி முறையிலான வீடியோ மிக்சிங்
கணனி முறையிலான புகைப்பட ஆக்கங்கள்
இவற்றுடன் கூட இப்போது
வடபகுதிக்குள் முதன்முதலில்
Frontier - 355
புகைப்பட பிரதியாக்கி இயந்திரத்தின்
அதிநவீன தொழிநுட்பம் மூலம்
விரைவான சேவையை தரமான முறையில் தருகிறோம்
புகைப்படம் மீதான புனரமைப்பு வேலைகள்
இறுவெட்டு மூலமான பாடற்பதிவுகள்
முதன்மைசாலை, கிளிநொச்சி.
021-228 5825
potkkaalam@hotmail.com

மக்களின் தேவைகளை நிறைவு செய்யும்

# மருதம் வாணிபத்தின்

## புதிய சேவைகள்



காலணி
வாணிபம்
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.




அணைகலன்
வாணிபம்
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.





கோழிப்புலால்
விற்பனை நிலையம்
பொது அங்காடி
உட்புறம்,
கிளிநொச்சி.

Bata வன்னி முகவர்
வணிகர்களுக்கு
சிறப்புக்கழிவு வழங்கப்படும்.

வன்னி முகவர்

வடபகுதிக்கான முகவர்

வழமையாளர்களின் தேவையை உடன் நிறைவு செய்ய குளிரூட்டப்பட்ட உடன் கோழி இறைச்சியை எந்நேரத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

தமது வழமையாளர்கள் அனைவருக்கும் தமது புதுவருட வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றனர்.
மருதம் வாணிபப்பணியாளர்கள்.

(சி-9362)



அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!




- அதிக விளைச்சலைப்பெற கலப்படமற்ற தேவையான பவர் அன் கொம்பனியினரின் உள்ளீடுகள்
- உத்தரவாதமளிக்கப்பட்ட மகாவலி சீமெந்து, எவரெடி பற்றரி கிளி, முல்லை, சாவகச்சேரி பிரதேசங்களின் ஏக விநியோகஸ்தர்.
- உத்தரவாத விலையில் பெற்றுக்கொள்ள இன்றே விரையுங்கள்.




# லலிதா ரேடிங் கொம்பனி

(சிவா கட்டடம்)
சிவசுந்தரம் வீதி,
பரவிப்பாஞ்சான்,
கிளிநொச்சி.



(சி-9363)

அன்பர்கள் நண்பர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது புதுவருட நல்வாழ்த்துக்கள்!

தளபாட விற்பனை துறையில் புதியதோர் அறிமுகம்
வள்ளல் தளபாட மாளிகை



3வருட உத்தரவாதம்

பாடசாலைகளுக்கும்
அலுவலகங்களுக்கும்
விசேட கழிவு

மரத்தளபாடங்கள்,உருக்குத் தளபாடங்கள்
வீட்டுப்பாவனைப் பொருட்கள்,பிளாஸ்ரிக் கதிரைகள்
மெத்தை வகைகள் அனைத்தையும்
தரமாகவும் உறுதியானதும், மலிவுவிலையில்
இன்றும் என்றும் எமது காட்சியறையில் அலுவலகங்களுக்குத்
தேவையான தளபாடங்களையும் வீட்டுப்பாவனைக்குத் தேவையான
தளபாடங்கலையும் பெற்றுக்கொள்ள
கைராசியான நிறுவனம்





வள்ளல்
தளபாட மாளிகை
148,150 யாழ்சாலை, கரடிபோக்குச்சந்தி கிளிநொச்சி.
வாடிக்கையாளர்களின் திருப்தியே எமது திருப்தி.

(சி-9519)

T.P:-021-2285790



எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் சித்திரைப்புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

SUMEE

SM கோல்ட் ஹவுஸ்

இல: 46A ,தர்மலிங்கம் வீதி, வவுனியா.
T.P: - 24-2224247, 077 - 6059672.

காலத்தால்
அழியாத கண்கவர்
தங்க நகைகளை சுத்தமான
22கரட் தங்கத்தில் தெரிவுசெய்து
பெற்றுக்கொள்ளலாம்.




(சி-9520)



எமது வழமையாளர்களுக்கும்
தமிழீழ மக்கள் அனைவருக்கும்
எமது சித்திரைப்புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்!

தமிழீழ வைப்பகம்
தமிழீழ மக்கள் பற்றியும்
அவர்களின் எதிர்காலம் குறித்தும்
தமிழீழ மண்ணின் உயர்வு குறித்தும்
சிந்திக்கிறது; திட்டமிடுகிறது; செயற்படுகிறது.




தமிழீழ வைப்பகம் BANK OF TAMILEELAM

தமிழீழ வைப்பகம் தமிழரின் காப்பகம்

SM Graphics

(சி-9521)


# தொடரப்போவது யாருடைய ஆட்சி?

வேலவன்

225 உறுப்பினர்கள் கொண்ட சிறிலங்காப் பாராளுமன்றத்தில் 106 உறுப்பினர்களுடன் - அதாவது அறுதிப் பெரும்பான்மை கிடைக்க ஆகக் குறைந்தது ஏழு உறுப்பினர்கள் தேவையாக உள்ள நிலையில் - ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் பதவியேற்றுள்ளது. பாராளுமன்றத்தில் ஆகக் கூடிய ஆசனங்களைக் கொண்ட ஒரு கட்சி என்ற ரீதியில் அக்கட்சியை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆட்சியில மர்தியிருக்கிறார்கள்.

ஆனால், எதிர்வரும் 22ஆம் திகதி பாராளுமன்றம் கூடுவதற்கு முன்னர் அறுதிப் பெரும்பான்மையை எட்டுவதற்கு ஏழுக்கு மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்றால் மட்டுமே பாராளுமன்றத்தில் அதனது இருப்பு நிச்சயமானதாக மாறும்.

எதிர்வரும் 22ஆம் திகதி பாராளுமன்றம் கூடும்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தனது பெரும்பான்மை பலத்தை நிரூபிக்க வேண்டும் என ஐக்கிய தேசிய முன்னணி வலியுறுத்தியிருக்கிறது. பெரும்பான்மை பலம் அவ்வேளையில் இல்லாதுவிட்டால் தனக்குள்ள நிறைவேற்று அதிகாரம் மூலம் அவ்வாறான ஓர் இக்கட்டிலிருந்து ஐ.ம.சு.மு. அரசாங்கத்தை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க காப்பாற்றி விடக்கூடும்.


வெற்றிக்களிப்பில் மகிந்த ராஜபக்ச

ஆனால், பாராளுமன்ற சபாநாயகர் தெரிவில், ஐ.ம.சு.மு.க்கு ஒரு தவிர்க்க முடியாத நிலைமை இருப்பது வெளிப்படையாகும். அதாவது, சபாநாயகராக இக்கட்சி முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவை நியமிக்க முனைகின்றது. இவர் தற்பொழுது பாராளுமன்ற உறுப்பினராக இல்லை. அதேவேளை, தேசியப் பட்டியலிலும் இவரது பெயர் இடம்பெற்றிருக்கவில்லை. இந்நிலையில், அவர் பாராளுமன்ற உறுப்பினராக முடியுமா? என்ற சர்ச்சை ஒரு புறமிருக்கிறது. அதனை ஒருவாறு வெற்றி கொண்டால் அல்லது வேறொருவரை அக்கட்சி சபாநாயகர் தெரிவுக்கு முன்னிறுத்தினாலும் பிரச்சினை தீர்ந்துவிடப் போவதில்லை.

தற்போதுள்ள நிலையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் 105 பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒரேயொரு ஈ.பி.டி.பி. உறுப்பினருமாக 106 பேர் மட்டுமே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்றனர். எனவே தான், முன்னிறுத்தும் ஒருவரை சபாநாயகராகத் தெரிவு செய்வதற்கு வேறொரு கட்சியினது ஆதரவு ஐ.ம.சு.முன்னணிக்குத் தேவையாக உள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணியானது தனக்குக் கிடைத்த தேசியப் பட்டியல் ஆசனங்கள் 11இல் ஏழு ஆசனங்களை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மலையக மக்கள் முன்னணி என்பவற்றுக்கு வழங்கி தனது முன்னணியைப் பலப்படுத்திக் கொண்டுள்ளது. எனவே. இக்கட்சிகளின் ஆதரவு மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணிக்கு கிடைக்கப்போவதில்லை.

எனவே. ஐக்கிய மக்கள் சுதந்தர முன்னணி நாடக்கூடிய தெரிவாக ஜாதிக ஹெல உறுமயவே உள்ளது. ஆனால், தேர்தல் முடிவுகள் வெளிவந்த உடனேயே பிக்கு ஒருவரை சபாநாயகராக நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஜாதிக ஹெல உறுமய முன்வைத்துவிட்டது. எனவே அக்கட்சியை நாடுவதாயின் சபாநாயகர் பதவியை அதற்குவிட்டுக் கொடுக்க வேண்டிய நிலை ஐ.ம.சு.மு. அரசாங்கத்துக்கு ஏற்படலாம்.

அதேவேளை, ஜாதிக ஹெல உறுமய அரசாங்கத்துடன் இணைந்து கொள்வதற்குப் பல நிபந்தனைகளை விதித்துள்ளது. ஹெல உறுமயவின் முக்கிய குறிக்கோள் என அது கூறுவது தர்மராச்சியம் ஒன்றை உருவாக்குவது என்பதாகும். இதன் கருத்து பௌத்த அரசாங்கம் ஒன்றை நிறுவுவது என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

அதேவேளை, அரசாங்கத்தில் இணைந்து கொள்வதற்கு ஜாதிக ஹெல உறுமய விதித்துள்ள நிபந்தனைகளான வடக்கு-கிழக்கு மாகாணங்களைத் தனித்தனியே பிரித்தல், புலிகளுடன் மட்டும் பேச்சுவார்த்தைகளை நடத்தக்கூடாது. அதாவது அது ஈ.பி.டி.பி. ஆனந்தசங்கரியையும் பேச்சுக்களில் இணைத்துக் கொள்ளக் கோருகிறது. இலங்கையின் ஒற்றை ஆட்சியை ஏற்றுக் கொள்ளல் போன்றனவாகும்.

ஜே.வி.பி.யை இணைத்துக் கொண்டதன் மூலமே பேச்சுவார்த்தைக் கதவுகள் மூடப்பட்டு விடுமோ என்ற ஐயம் சர்வதேச சமூகத்தின் மத்தியில் நிலவுகையில், ஜாதிக ஹெல உறுமயவும் அரசாங்கத்தில் இணைக்கப்படுமானால் பேச்சுவார்த்தைகளுக்கு "இரட்டைத் தாழ்ப்பாள்" போடும் சூழ்நிலையே தோன்றும்.

இப்பொழுதுள்ள இலங்கையின் பொருளாதார அரசியல் சூழ்நிலை எவ்வாறாயினும் பேச்சுவார்த்தை ஒன்றிலிருந்து எந்த அரசாங்கமாயினும் விலகிவிட முடியாத அளவிலேயே இருக்கின்றது. சிங்கள மக்கள் மத்தியில் சமாதான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்ற வாக்குறுதி ஐக்கிய தேசிய முன்னணியால் மட்டுமல்ல ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியாலும் முன்வைக்கப்பட்ட ஒன்றாகும்.

அதேவேளை, ஜே.வி.பி. என்ன தான் வெளிநாட்டு உதவி தேவையில்லை என முன்னர் கூக்குரலிட்டு வந்த போதும் அரசாங்கத்தைப் பொறுப்பேற்றபின் தான் அது தேவையா? தேவையில்லையா? சர்வதேச நாடுகளை அனுசரித்துச் செல்ல வேண்டிய தேவைகள் உள்ளனவா? என்பதைப் புரிந்து கொள்ள முடியும். எனவே புதிய அரசாங்கம் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதாயின் குறைந்தது ஜாதிக ஹெல உறுமயவை ஆட்சியில் இணைத்துக் கொள்ளாது இருத்தல் வேண்டும்.

அவ்வாறாயின் பிரச்சினையின் அடிப்படையில் அதன் ஆதரவைப் பெறுவதாயினும் கூட எல்லாவிடயங்களிலும் ஹெல உறுமயவைத் திருப்தி செய்ய வேண்டிய நிலையே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு உள்ளது.

இதேவேளை, புதிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் முக்கிய கட்சியான ஜே.வி.பி.யினது தொல்லை ஆட்சி தனதென நினைத்துக் கொண்டிருக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் அதன் தலைவி சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும் நிரந்தரமாகவே இருக்கப் போகிறது என்பது இப்பொழுதே வெளிப்படத் தொடங்கியிருக்கிறது. உண்மையில் இக்கூட்டு "சிரங்கு பிடித்தவனின் கை" நிலையை அக்கட்சிக்கு ஏற்படுத்தியுள்ளது என்றே கூறவேண்டும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றி பெற்று பிரதமர் பதவியேற்பு வைபவத்தில் ஜே.வி.பி. கலந்து கொள்ளவில்லை. அமைச்சரவைப் பொறுப்பேற்பு நிகழ்வில் கலந்து கொள்ளவில்லை அமைச்சர்களாக ஜே.வி.பி.யைச் சேர்ந்த எவருமே பொறுப்பேற்கவில்லை.


ஜாதிக ஹெல உறுமய

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அமைச்சரவையை 35 பேருடன் மட்டுப்படுத்திக் கொண்டதற்கு அவரது சொந்த முடிவு காரணமாக இருந்திருக்க முடியாது. ஏனெனில், முன்னைய ஆட்சிக் காலத்தில் மிகப் பெரிய அமைச்சரவையை வைத்திருந்தவர் அவர். கட்சிகள் இணைந்து ஆட்சியமைக்கும்போது கூட்டு சிதறிவிடாதிருக்க இவ்வாறு தாராளமாக அமைச்சர் பதவிகளை வழங்கித்தானாக வேண்டும் என்பது அவரின் கருத்தாகும்.

ஆனால், ஜே.வி.பி. இவ்வளவு காலமும் ஆட்சி நடத்திய கட்சியுமல்ல. ஆட்சியில் இணைந்திருந்த கட்சியுமல்ல. பெருந்தொகையானோருக்கு அமைச்சுப் பொறுப்புகளை வழங்கி ஆட்சியாளர் சுகபோகம் அனுபவித்து வருகின்றனர் என அக்கட்சி இவ்வளவு காலமும் பிரச்சாரம் செய்து வந்தது.

2001ஆம் ஆண்டின் இறுதியில் பொதுசன ஐக்கிய முன்னணி நன்னடத்தை அரசாங்கமொன்றை அமைக்க ஜே.வி.பி. வெளியிலிருந்து ஆதரவு தெரிவித்தபோது 20 அமைச்சர்கள் மட்டும் போதும் என அனுமதித்திருந்தது. அத்துடன் சனாதிபதி சந்திரிகாவுடன் சேர்த்தா? அல்லது அவரைத் தவிர்த்தா? 20 பேர் என்றெல்லாம் அது சர்ச்சையை ஏற்படுத்தியது.


சு.க.-ஜே.வி. ஒப்பந்தம்.

ஆனால், இப்பொழுது 35 பேர் கொண்ட அமைச்சரவைக்கு ஜே.வி.பி.யின் அங்கீகாரம் சந்திரிகாவிற்கு கிடைத்திருக்கும் என்றே நம்பலாம். எனவே ஜே.வி.பி. சற்றுத் தாராள மனப்பான்மை காட்டியிருக்கிறது. இது மேலும் விரிவடையவும் கூடும்.

எனினும் இது எல்லா விடயங்களிலும் பொருந்துமா? என்ற கேள்வியும் எழுகின்றது. குறிப்பாக இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காணும் விவகாரத்தில் சொல்லளவிலேனும் ஜே.வி.பி. இணக்கமான போக்கைக் கடைப்பிடிப்பதாக இல்லை என்பதே இன்று சர்வதேச நாடுகள் அமைதி முயற்சிகள் குறித்து சந்தேகம் கொள்ளக் காரணமாக அமைகின்றது.

இதேவேளை, சிறிலங்கா சுதந்திரக் கட்சியினதும் ஜே.வி.பி.யினதும் பொருளாதாரக் கொள்கைகள் முற்றிலும் மாறுபட்டவை. ஐக்கிய தேசியக் கட்சி உள்ளூர் வெளிநாட்டு முதலாளிகளுக்கு வாய்ப்பாக நடந்து கொள்வதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி கூப்பாடு போட்டாலும் அதற்கும் ஐ.தே.க.வுக்கும் பெருமளவு வேறு பாடில்லை.

உள்நாட்டு வர்த்தக சமூகம், வெளிநாட்டு முதலீடுகள், சிறிலங்காவின் வளங்களை வெளிநாட்டவர்க்கு விற்றல், அரச நிறுவனங்களைத் தனியாருக்கு விற்றல் போன்றவற்றை இவ்விரு கட்சிகளும் தாராளமாகவே செய்துள்ளன. அதேவேளை, மற்றக்கட்சி செய்யும் போதும் எதிர்த்தும் வந்துள்ளன.

ஆனால், இவ்விடயத்தை இவ்வளவு காலமும் ஜே.வி.பி. கடுமையாக எதிர்த்து வந்திருக்கிறது. அத்துடன் அது மேற்கு நாடுகளை கடுமையாக எதிர்க்குமொரு சக்தியாகவும் இருந்து வந்திருக்கிறது.

அவ்வாறான கொள்கையைத் தான் அது தொடர்ந்தும் கடைப்பிடிக்குமா? என்ற கேள்வி- அதாவது, தீவிர மாக்ஸிட் கட்சி என்ற அதன் விம்பமானது - மேற்கு நாடுகளிடையே இப்போதைய அரசு குறித்த பலத்த சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

ஜே.வி.பி. தொடர்ந்தும் செந்நிறமாகவே இருக்குமாயின் நீலக் கட்சியுடன் நித்தம் முரண்படுவதைத் தவிர்க்க முடியாது போகும் என்பது வெளிப்படை. ஆட்சியை நடத்துவதாயின் சந்திரிகா அரசு முன்னர் கடைப்பிடித்த வழி முறைகளையே தொடர்ந்தும் கடைப்பிடிக்க வேண்டிய தேவை அதற்கு உண்டு. அவ்வாறில்லாது ஜே.வி.பி. கூறுவது போன்ற பொருளாதாரக் கொள்கைகளைக் கடைப் பிடிக்க வேண்டியிருந்தால் 1971-77 காலப் பகுதி போன்ற நிலை தோன்ற வாய்ப்பிருக்கின்றது.

எனவே, முரண்பாட்டின் மொத்த வடிவங்கள் இரண்டு ஒன்றிணைந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கின்றன. முன்னர் ஏற்பட்ட கூட்டுகளைப் போலல்லாது இம்முறை ஜே.வி. பி.க்கு கிடைத்துள்ள ஆசனங்களின் தொகை கூட்டுப் பெற்ற ஆசனங்களின் 37 வீதமாகும். எனவே, ஜே.வி.பி.யுடன் முரண்பட்டுக் கொண்டால் ஆட்சி முடிவடைவது உறுதியாகும். போதிய பெரும்பான்மையில்லாத நிலையில் அது பற்றி எதுவித சந்தேகமும் கொள்ளத்தேவையில்லை.

எனவே, தொடரப் போவது சந்திரிகாவினதோ சு.க.வினதோ ஆட்சியல்ல ஜே.வி.பி.யினதும் ஜாதிக ஹெல உறுமயவினதும் ஆட்சியாகும்.

அதாவது. சனாதிபதி தனது நிறைவேற்று அதிகார மூலம் ஆட்சியை நீடித்தாலும் கூட இதுவே நிலையாகும். □

## சிந்தனைக்கு



தமிழ் மக்களின் போராட்டம் தன்னாட்சி உரிமையை வென்றெடுப்பதற்கான போராட்டம், தமது அரசியல் தலைவிதியை தாமே நிர்ணயித்துக் கொள்ளும் அரசியல் சுதந்திரத்திற்கான போராட்டம்.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 13-04-2004

## ஆட்சியில் அமரும் முன்பே!

ஐக்கிய மக்கள் விடுதலை முன்னணியின் ஆயுட்காலம் ஒரு மாதகாலமே என எதிர்வு கூறினார் ஐ.தே. கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க. அத்தோடு அவர் 1960இல் இடம்பெற்ற ஆட்சிக் கவிழ்ப்புச் சம்பவத்தையும் நினைவு கூர்ந்தார்.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வு கூறியதுபோன்று ஒருமாத காலத்திற்குள் புதிய அரசாங்கம் கவிழ்வதற்கான சூழ்நிலை உருவாகுமா என்பது கேள்விக்குரியதொன்றாகவே இருப்பினும்கூட, இப்புதிய அரசாங்கத்தின் ஆயுட் காலம் சொற்பமானதாகவும், எதிர்பாராத எவ்வேளையிலும் அது தோற்கடிக்கப்படவோ கவிழ்க்கப்படவோ கூடிய வாய்ப்புண்டு என்பதற்கான சமிக்ஞைகள் நிரம்பவே உண்டு.

ஐ.ம.சு. முன்னணி அறுதிப் பெரும்பான்மையை இன்னமும் பெற்றுக்கொள்ளவில்லை என்பது ஒருபுறம் இருக்க-இக்கூட்டணி எவ்வளவு காலத்திற்கு நீடிக்கும் என்பதையே தற்பொழுது தீர்மானிக்க முடியாததொரு நிலை காணப்படுவதாகவே கொள்ள வேண்டியதாகியுள்ளது.

ஏனெனில், சு.கட்சியும் – ஜே.வி.பி.யும் சுமார் ஒரு வருடம் நடத்திய பேச்சுவார்த்தை மூலம் எட்டப்பட்ட ஓர் உடன்பாட்டின் அடிப்படையிலேயே தேர்தலில் கூட்டாகப் போட்டியிட்டன. அதேவேளை, புதிய அரசாங்கம் அமைப்பது அவ்உடன்பாட்டின் அடிப்படையிலேயே அமையும் எனவும் கூறப்பட்டது.

ஆனால், தேர்தல் நடந்து முடிந்து சுமார் பத்து நாட்கள் கடந்துவிட்ட நிலையிலும் இக்கூட்டணியின் இடையில் சுமூகமானதொரு நிலை உருவாகவில்லை. பிரதமர் நியமனத்தில் தொடங்கி அமைச்சரவை அமைப்பது வரையில் இருதரப்பினர் இடையில் இணக்கப்பாடு ஏற்பட்டதாக இல்லை.

பிரதமராக மகிந்த ராஜபக்ஷ பொறுப்பேற்றமை ஜே.வி.பி.க்கு ஏற்றுக் கொள்ளத்தக்கதொன்றாக இல்லை. இது குறித்து சனாதிபதி சந்திரிகாவிற்கு கடிதம் மூலம் ஆட்சேபத்தைத் தெரிவித்தது மட்டுமல்ல, அரசாங்கம் தனது நடவடிக்கைகளைப் பொறுப்பேற்கும் முன்னரே ஜே.வி.பி. அரசாங்கத்தை விமர்சிக்கவும் தொடங்கிவிட்டது. இதில் உள்ள வேடிக்கை என்னவெனில் அரசாங்கத்தின் பங்காளிகளாகத் தாம் இருப்பதை அது மறந்துள்ளமையே ஆகும்.

இது ஒருபுறம் இருக்க, அமைச்சரவை அமைக்கும் விடயத்திலும் இழுபறி நிலை தோன்றியது. இதனால், ஜே.வி.பி. அமைச்சர்கள் இன்னமும் பதவிப் பிரமாணம் செய்யவில்லை. முன்னர் காணப்பட்ட இணக்கப்பாட்டிற்கு ஏற்ப அமைச்சுக்கள் ஒதுக்கப்படாமையே காரணம் என ஜே.வி.பி. குற்றம் சாட்டியுள்ளது. அதாவது, சனாதிபதி சந்திரிகா வாக்களித்ததன் படி நடந்துகொள்ளவில்லை என அது கண்டனம் தெரிவித்துள்ளது. இதேவேளை, சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் அளவிற்கு அதிகமாக விட்டுக் கொடுக்கப்பட்டுவிட்டதாகக் குற்றம் சாட்டுகின்றனர்.

இவ்வாறாக, அரசாங்கம் சபாநாயகரை நியமித்து அறுதிப் பெரும்பான்மையை நிலைநாட்டுவதற்கு முன்பாகவே அரசாங்கத்தில் பங்கேற்கும் இரு கட்சிகளினாலும் இணக்கப்பாடு ஒன்றிற்கு வருவதற்கு முடியவில்லை. பரஸ்பரம் ஒருவரை ஒருவர் குற்றம்சாட்டுவதிலும் குறை காண்பதிலுமே அக்கறை காட்டுகின்றன.

இந்நிலையில், இவ்விரு கட்சிகளும் அமைத்துள்ள அரசாங்கம் எவ்வாறு ஸ்திரத் தன்மை கொண்டதாக இருக்கும், எவ்வளவு காலத்திற்கு இதன் ஆட்சி அதிகாரம் நீடிக்கும் என்பது கேள்விக்குரியதொன்றாகவே உள்ளது. இத்தகையதொரு நிலை நீடிக்குமானால், முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் எதிர்வு கூறலானது எதிர்க்கட்சித் தலைவர் ஒருவரின் விரக்தியான பேச்சு என எவ்வாறு புறந்தள்ளிவிட முடியும்?

ஜே.வி.பி.யைப் பொறுத்து அது சுதந்திரக்கட்சியை தனது வளர்ச்சிக்கான ஏணிப்படியாகவே கொள்ள நினைத்தது. அதில் அது வெற்றியும் கண்டுள்ளது. சுதந்திரக்கட்சியின் தலைமை எவ்வாறாயினும் எதிர்த் தரப்பு அரசாங்கத்தைக் கவிழ்க்க வேண்டும் என்பதில் குறியாக இருந்ததே ஒழிய இதனால்தான் மீளமுடியாத பாழும் கிணற்றில் விழ வேண்டி வரும் என்பதைக் கருத்திற் கொள்ளவில்லை. இது குறித்து விடுக்கப்பட்ட எச்சரிக்கையையும் அது கருத்தில் கொள்ளவில்லை. ஆனால், தற்போதைய சூழ்நிலையில் ஜே.வி.பி.யின் ஆட்டத்திற்கு ஏற்ப ஆடுவதைத் தவிர சு.கட்சிக்கு வேறு வழியில்லை. அவ்வாறு இல்லாதுவிடில் ஆட்சியைப் பணயம் வைக்க வேண்டியது தவிர்க்க முடியாததாகிவிடும்.

# இனிய புதுவருடமிதில் இளையவரின் இனிய வாழ்த்துக்கள்

நாளைய சுதந்திர ஈழத்தில்
வாழப்போகும் எம் சந்ததி
நன்றியோடு உச்சரிக்கப்படவேண்டிய
அதியுன்னத தலைவன் நீ!
விடுதலை வீரியம் குன்றாத
ஈழத்து மைந்தர்களை
உமதுசேனையில் இணைத்து
போரியலின் கொள்கை ரீதியில்
ஒவ்வொரு போராளியையும் உரமேற்றி வளர்த்து
ஈழத்து வரலாற்றில் புதிய சாதனைகள் படைக்கும்
உமது சேனையில் இன்று
எத்தனை தலைசிறந்த தளபதிகள்
உலகரங்கின் கண்களுக்குள்
கவரப்பட்டுள்ளாய் நீ!
உலகவரைபடத்தின்
எங்கோவோர் புள்ளியில்
மறைந்து கிடந்த தமிழீழத்தை
உலகரங்கின் கண்முன் நிலை நிறுத்திய
போராளுமையின் சிகரம் நீ!
எமதீழ தேசத்தின் தேசபிதா நீரே!
மறைத்தமிழனின்நெஞ்சமதில் புரையோடிப் போன
வீரதீர ஆதிசூர வல்லமைக்குணமது
மறைந்தொழியவில்லையென
புறநானூற்று வீரத்தை புதிதாக்க
ஈழத்து போராளிகளின் நெஞ்சங்களில்
உம் சொல்வன்மையால் வீரத்தை விதைத்தீரே!
இன்று உம்மை மனதாழத்தில்
பாராட்டாத மனிதனுண்டோ
இவ்வுலகில்?
நீ எமது ஈழத்திற்கு
இறைவனால் உவந்தளிக்கப்பட்ட
உயரிய கொடை

உமது காலத்திலேயே நாங்கள்
சுதந்திர ஈழத்தை வென்றெடுப்போம்
"தமிழன்"-என தலை நிமிர்ந்து
வீறு நடை பயில்வோம்
வெற்றியின் வீரனே!
உமது சாணக்கியமிகு சாதனைகளை
வாயார வாழ்த்த
வயது எட்டவில்லை எமக்கு
மயிர்க்கூச்செறியும் சாதனைகளை
ஈழத்து வேங்கைகள் புரிய
மதி நுட்பம் நிறைந்த
திட்டங்களைத் தீட்டும்
எங்கள் தலைவனே
நீ எமக்கு தீர்க்கதரிசிய்யயா!
அதியற்புதமான தலைவனுனை
சிறையிதனுளிருந்து
மலரும் இந்த புதுவருடமதில்
வாழ்த்துவதில்
பெருமகிழ்ச்சியடைகிறோம்.
எம் தேசத்தின் தலைவனே
வாழ்க நீ வாழ்க!
எமது ஈழத்தேசத்தின்
இலட்சிய விளிம்பினில்
இன்று உம் பாதம் பயணிக்கிறது
வெற்றியின் நாயகன் நீரே
வெற்றி நிச்சயம்!
வாழ்த்துகிறோம் வாழ்க!
இனிய புத்தாண்டு நன்நாளில்
தலைவரை உளமார வாழ்த்தும்

*களுத்துறை சிறைச்சாலை*
*தமிழ் அரசியற் கைதிகள்.*

# ஐ.ம.சு.மு. நிறைவேற்று குழுகூட்டத்தை கூட்ட ஜே.வி.பி.யினர் வற்புறுத்து

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியின் நிறைவேற்றுக்குழு கூட்டத்தை கூட்டுமாறு ஜே.வி.பி. கோரியுள்ளது.

கூட்டமைப்பிற்குள் அண்மையில் ஏற்பட்ட கடினமான முரண்பாடுகளுக்கு தீர்வுகாணும் நோக்கிலேயே இவ்அவசர கூட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தமக்கு வழங்கப்பட்ட 04 அமைச்சுக்களின் கட்டுப்பாட்டிற்குள் வருகின்றவிடயங்களை ஏனைய அமைச்சுக்களுக்கு மாற்றக் கூடாதெனவும் ஜே.வி.பியினர் அறிவித்துள்ளனர்.

இதேவேளை,ஜே.வி.பியின் அமைச்சர்கள் புத்தாண்டிற்குப் பின்னரே சனாதிபதியின் முன் சத்தியப்பிரமாணம் செய்ய முடிவு செய்துள்ளனர்.

ஆயினும் ஐ.ம.சு. கூட்டமைப்பின் நிறைவேற்றுக்குழு கூட்டத்தில் சில விடயங்களை கலந்துரையாடிய பின்னர் தாம் பதவிகளைப் பொறுப்பேற்போமென அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

# ராஜினாமா கடிதத்தை கையளித்த பின்பே மகிந்த ராஜபக்ச பிரதமராக பதவியேற்பு!

(கொழும்பு)

சிறிலங்கா பிரதமர் மகிந்தராஜபக்ச தனது ராஜினாமா கடிதத்தை சனாதிபதியிடம் கையளித்துள்ளார்.

திகதி குறிப்பிடாமல் இக் கடிதத்தை அவர் தான் பிரதமராக பதவியேற்கும் முன்னர் சனாதிபதியிடம் கையளித்துள்ளதாக அவருக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அரசியலமைப்பில் மாற்றத்தை கொண்டுவர முயற்சிக்கும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவ்வாறு நிகழுமானால் பிரதமர் பதவியை தான் வகிக்க ஏதுவாக இந்த திகதி குறிப்பிடப்படாத ராஜினாமா கடிதத்தை பெற்றுக்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பிரதமராக பதவியேற்றுள்ள ராஜபக்ச அலரி மாளிகையை தனதுவாசஸ்தலமாக கொள்ளாது அலுவலகமாக பயன்படுத்திவருவதாக தெரியவருகிறது.

# பெண்களுக்கான ஆசியக் கிண்ண கிரிக்கெட் 17ஆம் திகதி ஆரம்பம்

எதிர் வரும் 17ம் திகதி ஆரம்பமாகவுள்ள பெண்களுக்கான ஆசியக்கிண்ண ஒருநாள் கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பமாகவுள்ளன. இப்போட்டிகளில் சிறிலங்கா, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் பங்குபற்றுகின்றன.

I.C.Cயின் அமைப்புடனும் சிங்கர் நிறுவனத்தின் அனுசரணையுடனும் நடத்தப்படும் இப்போட்டி 2005ம் ஆண்டு நடைபெறவுள்ள பெண்கள் உலகக்கிண்ணப் போட்டிகளுக்கு முன் நடைபெறும் மூன்று நாடுகளும் பங்கேற்கும் இறுதிப்போட்டி இதுவாகும்.

இந்திய பாகிஸ்தான் அணிகள் நாளை மறுதினம் சிறிலங்காவுக்கு வருகைதரவுள்ளதுடன் வரும் திங்கள் இவ்விரு அணிகளும் கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் மோதவுள்ளன.

# தலைமைப் பொறுப்பை மாற்ற சிரேஷ்ட வீரர்கள் வற்புறுத்து

சிம்பாப்வே அணியிலிருந்து நீக்கப்பட்ட ஹீத்ஸ்ரிக்கை மீண்டும் அணித்தலைமைப் பொறுப்பை வழங்குமாறு கோரியும் அவ்வாறு வழங்காவிட்டால் சிம்பாப்வே கிரிக்கெட் சபையுடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தை முறித்துக் கொள்வதாகவும் அணியின் சிரேஷ்ட வீரர்கள் சிலர் அறிவித்துள்ளனர்.

அண்மையில் ஹீத்ஸ்ரிக்கை விலக்கிவிட்டு 20வயது இளம் வீரர்தைபுவை அணித்தலைவராக அந்நாட்டு கிரிக்கெட் சபை நியமித்தது தெரிந்ததே இதற்கு மாறாகவே தற்போது மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கடந்த சனியன்று கிரிக்கெட்சபை அதிகாரிகளுக்கும் அண்டிபிளவர்,ஸ்ரிக் மற்றும் வக்கில் ஒருவருக்கும் இடையில் பேச்சுக்கள் நடைபெற்றன. இது தொடர்பாக தைபுகருத்து தெரிவித்தபோது, தாம் தலைமை வகிக்கத்தயாராக இருப்பதாகவே தெரிவித்துள்ளார்.



## – அமைச்சுக்கள், கூட்டுத்தாபனங்களில் –

# முக்கிய பொறுப்புக்களை வகித்த அதிகாரிகள்

# ஆட்சி மாற்றத்தையடுத்து பதவி துறப்பு

(கொழும்பு)

**அமைச்சுக்களிலும் முக்கிய கூட்டுத்தாபனங்களிலும் பொறுப்புக்களை வகித்த மூத்த அதிகாரிகள் பலர் அப்பதவியிலிருந்து விலகியுள்ளனர்**

முன்னைய அரசாங்கத்தினால் பதவியில் நியமிக்கப்பட்டவர்களே தற்போது பதவி விலகிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. முதலீட்டுச்சபை தலைவராக இருந்த அர்ஜுன் மகேந்திரனிற்குப் பதிலாக லலித்டிமெல் நியமிக்கப்பட்டுள்ளார். பொதுத்துறை நிறுவனங்களை மறுசீரமைப்பதற்கான ஆணைக்குழுவின் தலைவரும் இலங்கை வங்கியின் தலைவருமான சாந்தபெரேரா தனது பதவிகளை ராஜினாமா செய்துள்ளார். இவரது இடத்திற்கு இன்னும் எவரும் நியமிக்கப்படவில்லை.

முன்னாள் பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன், அமைச்சுக்களிற்கு இடையிலான உணவுக்குழுவின் தலைவர் கே.எச்.ஜே.விஜயதாச ஆகியோரும் பதவிகளைராஜினாமா செய்துள்ளனர். இதேவேளை கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத் தலைவர் லால் விக்கிரமதுங்க தேர்தலிற்கு இரண்டு நாட்களுக்கு முன்னரே தான் பதவியை ராஜினாமா செய்துள்ளதாக தெரிவித்துள்ளார். இவரது இடத்திற்கு இதுவரை யாரும் நியமிக்கப்படவில்லை.

ஊழியர் நம்பிக்கை நிதியத் தலைவர் டினேஸ் வீரக்கொடி உள்நாட்டு விமானப்போக்குவரத்து அதிகாரசபைத் தலைவர் சிப்பி அலிஸ் ஆகியோரும் பதவிகளை விட்டு விலகியுள்ளனர். இவர்களது இடங்களிற்கும் இன்னும் எவரும் நியமிக்கப்படவில்லை.

சிறிலங்கா ஏயார் லைன்ஸ் தலைவர் தயாபெல்பெல தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார் விமான நிலையம் மற்றும் விமானப் போக்குவரத்து சேவைகள் நிறுவனத்தின் (வரையறுக்கப்பட்டது) தலைவர் ஹேமசிறி பெர்னாண்டோவும் தனது ராஜினாமாக்கடிதத்தை அனுப்புவாரென எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை முன்னாள் பிரதமரின் ஆலோசகர் பாஸ்கரலிங்கத்தின் நிலைப்பாடு குறித்து எதுவும் தெரியவில்லை நிதிஅமைச்சின் செயலாளர்சரித்த ரத்வத்த கடந்த வெள்ளிக்கிழமை வரை ராஜினாமா செய்யப்படவில்லையென அவரது அலுவலக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர் . மேலும் ஏற்றுமதி அபிவிருத்தி சபைத்தலைவர் ரட்ணா சிவரட்ணம் குறித் தும் தகவல் எதனையும் பெற முடியவில்லை. இவரது மூன்றாண்டுக்கள பதவிக்காலத்தில் இரண்டாண்டுகள் பூர்த்தியாகிவிட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

# மின் அழுத்த அதிகரிப்பால் இலத்திரனியல் உபகரணங்கள் பழுது

## -வீட்டு உரிமையாளர் இழப்பீடு கோரல்

(செட்டிகுளம்)

சனிக்கிழமை இரவு வவுனியா குட்சட் வீதியில் மின் விநியோகத்தில் ஏற்பட்ட கோளாறினால் பல நூற்றுக் கணக்கான வீடுகளில் இருந்த பெறுமதி வாய்ந்த இலத்திரனியல் பொருட்கள் பழுதடைந்திருப்பதாக வீட்டின் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக இலங்கையின் மின்சார சபையினர் தமக்கு நட்டஈடு வழங்குமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் சனிக்கிழமை இரவு வவுனியா குட்சட் வீதி பகுதியில் அதிகளவு மின்சாரம் வந்ததன் காரணமாக பல நூற்றுக்கணக்கான வீடுகளில் இருந்த கொம்பியூட்டர்கள் தொலைக்காட்சிகள் மற்றும் குளிரூட்டிகள் என்பன முற்றுமுழுதாக பழுதடைந்து விட்டதாக மக்கள் தெரிவித்துள்ளனர். (21)

# விடுமுறையில் சென்ற சிப்பாயிடம் இரண்டு கைக்குண்டுகள் மீட்பு

## -கொலை முயற்சிக்குத் திட்டம்

(வவுனியா)

வவுனியாவில் இருந்து விடுமுறைக்காக களுத்துறைக்குச் சென்ற இராணுவச்சிப்பாய் தன்னுடன் 02 கைக்குண்டுகளை எடுத்துச்சென்றதாக இராணுவப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் மதுகென என்னும் பிரதேசத்தில் வசிப்பவர் என்றும் இவருடன் விரோதமான ஒருவர் களுத்துறை மதுகெனப் பகுதியில் வாழ்ந்து வருகின்றார் எனவும் அவரைக்கொலை செய்ய இந்தக் கைக்குண்டுகள் இரண்டையும் எடுத்து வந்ததாக இராணுவத்தினருக்கு வாக்குமூலம் அளித்துள்ளார். அவரை எதிர்வரும் 21ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு இடப்பட்டுள்ளது இவரிடம் இருந்து மேலதிக விசாரணையை வவுனியா பொலிசார் விசாரணை செய்து வருகின்றனர். (21)

# யாழ்.வீதி அபிவிருத்திக்கு நான்கு கோடி ரூபா ஒதுக்கு

யாழ் மாவட்டத்தில் உள்ள வீதிகளை அபிவிருத்தி செய்வதற்காக 04 கோடி ரூபாவை யாழ்அரச செயலகம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் இவ்வாண்டு மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பல உதவும் அமைப்புக்களாலும் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்தே இந்த 04 கோடி ரூபாவும் யாழ் மாவட்ட வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கென ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில், யாழ்.' மாவட்டத்தில் உள்ள 510 வீதிகள் யாழ் மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் புனரமைப்புச்செய்யப்படவுள்ளன. (33)

# குடாநாட்டில் மக்கள் ஆரோக்கியம் பேண தமிழீழ சுகாதார சேவையினர் ஏற்பாடு

தமிழீழ சுகாதார சேவையினரால் யாழ் குடாநாட்டில் சுகாதாரம் பேணும் நடவடிக்கைகள் பல மிகச்சிறப்பான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் ஓர் அங்கமாக மக்களின் ஆரோக்கியத்திற்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய வகையில் விற்பனையாகும் சட்டவிரோத மற்றும் காலாவதியான உணவு, மருந்துப் பொருட்களை திடீர் சோதனைகள் மூலம் கைப்பற்றி உரிமையாளர்களுடைய அனுமதியுடன் அவற்றை அழிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவினருடன் இணைந்து தமிழீழ சுகாதார சேவையினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் இந்த நடவடிக்கைகள் வடமராட்சி, தென்மராட்சி யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகள் உட்பட யாழ்குடாநாட்டில் உள்ள சகல உணவு மற்றும் மருந்துப் பொருட்களை உற்பத்திசெய்யும், விற்பனை செய்யும், நிலையங்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (33)

# சீர்செய்யப்படாத நிலையிலுள்ள ஓலைத் தொடுவாய் கிராம வீதி!

(மன்னார்)

மன்னார்-தலைமன்னார் வீதியிலிருந்து பிரிந்துபோகும் ஓலைத்தொடுவாய் கிராமத்துக்குப் போகும் பாதை மிகவும் மோசமான நிலையிலுள்ளது அப்பாதை குன்றும் குழியுமாகவுள்ளதால் நேற்று முன்தினம் பெய்த மழை காரணமாக மிகவும் மோசமாகக் காட்சியளிக்கின்றது. இக்கிராமம் கடந்த போர்க்காலத்தில் பாரிய அழிவுக்குட்பட்ட கிராமமாகும்.

தற்சமயம் அங்கு 150 குடும்பங்கள் பேசாலை அகதி முகாமில் இருந்தும் தோட்டவெளி அகதிமுகாமில் இருந்தும் இங்கு மீளக்குடிய மர்ந்தவர்களாவர் இவர்களுக்கான வீட்டுத்திட்டம் அடிப்படை வசதிகளும் தற்சமயம் மன்னார் அரசாங்க அதிபரால் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. (மி)

# பெண்ணுரிமை, மனித உரிமை அறிவை படையினருக்கு புகட்ட தீவிர முயற்சி

## - போதிய அறிவின்மையே உரிமை மீறலுக்கு காரணமாம்

(யாழ்ப்பாணம்)

பெண்ணுரிமைகள் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான அறிவினை யாழ்மாவட்டத்தில் நிலை கொண்டுள்ள பொலிசார் மற்றும் இராணுவத்தினர் மத்தியில் ஏற்படுத்தும் நடவடிக்கைகளை மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் தீவிரப்படுத்தியுள்ளனர்.

யாழ்குடாநாட்டில் இடம் பெறும் பெண்ணுரிமை மீறல்களில் மற்றும் மனித உரிமை மீறல்களில் யாழ் குடாநாட்டில் நிலைகொண்டுள்ள அரசபடையினரே அதிகம் சம்பந்தப்பட்டிருக்கின்றமை ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளன. இதற்கு பொலிசார் மற்றும் இராணுவத்தினர் போன்ற அரச படையினர் மத்தியில் பெண்ணுரிமை மற்றும் மனித உரிமைகள் தொடர்பான போதியளவு அறிவின்மையே காரணம் என கூறப்படுகிறது.

இதனைக்கருத்தில் கொண்டே பொலிசார் மற்றும் இராணுவத்தினருக்கு பெண்ணுரிமைமனித உரிமைகள் தொடர்பான அறிவினைப்புகட்டி வருவதுடன், மீறும் சந்தர்ப்பங்களில் கிடைக்கும் தண்டனைகள் தொடர்பாகவும் மனிதஉரிமைகள் ஆணைக்குழுவினர் அறிவுறுத்திவருகின்றனர். (33)

# வறிய மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதே எங்களது கொள்கை!

## புதிய நிதி அமைச்சர் கூறுகின்றார்

(கொழும்பு)

ஊழல் மோசடியை முற்றாக ஒழித்து உற்பத்தியை அதிகரித்து வறிய மக்களை முன்னேற்றுவது என்ற கொள்கையின் அடிப்படையில் புதியபொருளாதார முறைமை ஒன்றை ஏற்படுத்தப் போவதாக புதிய நிதி அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் செய்தியாளர்களை சந்தித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொருளாதார அபிவிருத்திக்கு தனியார் மற்றும் அரசதுறையின் பங்களிப்பை பெற்றுக் கொள்வதாகவும் கூறினார். அத்துடன் வெளிநாட்டு உதவிகளை சிறந்த முறையில் பயன்படுத்துவதே தமது அரசாங்கத்தின் திட்டம் எனவும் சரத் அமுனுகம தெரிவித்தார்.

பிரயாசைப்படாது நாட்டை முன்னேற்ற முடியாது களர்ப்பட்டு பவர்கள் தொடர்ந்தும் கஸ்ரப்படுவதோடு சிறு குழுவினர் அவர்களின் பிரயாசையின் பலனை அனுபவிக்க இடமளிக்க முடியாது. அதனால் ஊழல் மோசடியை முற்றாக ஒழித்து வறிய மக்களுக்கு கைகொடுக்கும் புதிய பொருளாதார யுகம் ஒன்றை ஏற்படுத்துவதே எமது குறிக்கோளாக அமைந்துள்ளது எனவும் அவர் கூறுகின்றார்.

## கண்டெடுப்பு

(அலுவலக செய்தியாளர்)

பரந்தன் கிளிநொச்சியைச் சேர்ந்த பொ.கமலநாதன் என்பவரது உந்துருளியின் திறப்புடன் தமிழீழ மோட்டார் ஊர்தியின் ஆவணமும் கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி ஈழநாதம் விளம்பரப்பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரித்துடையவர் அலுவலக நேரத்தில் சமூகம் கொடுத்துப்பெற்றுக்கொள்ளவும்.(சோ)

## குளம் புனரமைப்பு

மன்னார் மாவட்டத்தில் 2004 ஆம் ஆண்டில் நீர்பாசனக் குளங்களை புனரமைப்புதிட்டத்தின் கீழ் தட்சனா மருதமடுக் குளம் ஒரு கோடியே அறுபது லட்சம் ரூபாய் செலவில் புனரமைக்கப்படவுள்ளது இதற்கான நிதியுதவியை யப்பானிய வங்கியின் உதவியுடன் நீர்ப் நிறுவனம் செய்யவுள்ளது இதனால் 215 விவசாய குடும்பங்கள் நன்மையடையும். (மி)

# நாட்டை முன்னேற்றுவதாகக் கூறும் கூட்டணி தற்சமயம் பதவிப்போட்டியில் இறங்கியுள்ளது

## முன்னாள் அமைச்சர் காமினி ஜெயவிக்கிரமபெரேரா

(கொழும்பு)

நாளுக்கு நாள் பிற்போடப்பட்டு வந்த ஐ.ம.சு. முன்னணியின் அமைச்சரவை பதவியேற்பு ஒரு வாறு ஜே.வி.பியினது பங்களிப் பின்றி யடைபெற்று முடிந்திருக்கிறது எனவும் நாட்டை முன்னேற்று வதாகக் கூறிக்கொள்ளும் கூட்டணி தற்போதே பதவிப் போட்டியில் மும்முரமாக இருக்கிறது என முன்னாள் அமைச்சரும் குருநாகல் மாவட்ட ஐக்கியதேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினருமான காமினி ஜெயவிக்கிரமபெரேரா அறிக்கையொன்றின் மூலம் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது, மகிந்த ராஜபக்ஷ 90 நாட்களுக்கு மட்டுமே ஒப்பந்த அடிப்படையில் பிரதமராகப் பதவியேற்றியிருக்கும் நிலையில் தற்போது அமைச்சரவை நியமனங்களும் குழப்பத்திற்குள்ளாகியிருக்கிறது.

தேர்தலின் போது தொண்டைகிழியக் கத்திய கூட்டணி ஆதரவாளர்கள் தற்போது தத்தமது பதவிகளை உறுதிசெய்து கொள்ள முடியாது சண்டையிடுகின்றனர். பதவிப்பிரமாணம் எடுக்க முன்னரேயே சிலர் அமைச்சு வாகனங்களை கடத்தி சென்றிருக்கின்றனர் சாக்குறுதியளித்தது போன்று நாட்டை முன்னேற்றுவதற்குப் பதிலாக சண்டையிட்டு பதவிகளையும் அரச சொத்துக் களையும் கைப்பற்றுவதில் ஈடுபடுகின்றனர்.

இந்த நிலையை மிக கவனமாக அவதானித்து மக்களிடம் புரியவைக்கவும் கூட்டணியின் உண்மை வேஷத்தை காட்டவும் நான் விரும்புகின்றேன் என அவ்வறிக்கை கூறுகிறது.


## அறிவித்தல்

இலண்டன் ரீ.ஆர் ரெக் (T.R Tech) நிறுவன அனுசரணையுடன் கிளிநொச்சி தொழில்நுட்பக்கல்வி நிறுவனத்தினரால் சர்வதேச அங்கீகாரம் உடைய சான்றிதழ்களுடன் கூடிய தகவல் தொழில்நுட்ப பயிற்சிக்கு விண்ணப்பித்து நேர்முகத் தேர்விற்கு தோற்றியவர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் எதிர்வரும் 14.04.2004ஆம் திகதி, புதன்கிழமை காலை 11.00 மணிக்கு, கிளிநொச்சி தொழில்நுட்பக்கல்வி நிறுவனத்தில் ஆரம்பமாகவுள்ளமையால் சம்பந்தப்பட்டவர்கள் தவறாது கலந்து கொள்ளவும்.

தகவல்:-

அதிபர்,
தொழில்நுட்பக்கல்வி நிறுவனம்,
கிளிநொச்சி.

(சி-9365)

# விடுதலைப்புலிகளுடன் கலந்தாலோசித்து சூழ்நிலைக்கேற்ப அரசியல் நகர்வுகள் எடுப்போம்

## பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்

(கொழும்பு)

இனிவரப்போகும் பாராளுமன்றக் கூட்டங்களில் பேசப்படும் விடயங்கள் தொடர்பாக கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் கலந்தாலோசித்த பின்னரே ஒவ்வொரு அரசியல் நகர்வுகளும் சூழ்நிலைக்கு ஏற்ற வகையில் அமையும் என வன்னி மாவட்ட தமிழ்க்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

இவர் செட்டிகுளம் பிரதேச செயலர் பிரிவில் உள்ள வீரபுரத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருந்த விடயங்களை சனாதிபதி நடைமுறைப்படுத்த முன்வரும் பட்சத்தில் புதிய அரசாங்கத்திற்கு பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் ஆதரவு வழங்குவது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

வடக்கு கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களுடைய நீண்ட காலப்பிரச்சினையை அரசியல் ரீதியா கத் தீர்க்க இதயசுத்தியுடன் செயற்பட சனாதிபதி முன்வரவேண்டும்.

எந்தக்கட்சி ஆட்சி அமைத்தாலும் அந்த அரசாங்கம் ஸ்திரம் கொண்டதாக இருக்காது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களை இம்முறை புறந்தள்ளிவிடமுடியாது எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# எமது கொள்கையை சு.க.ஏற்காவிடின் பாராளுமன்ற பின்வரிசையில் அமர்வோம்

## ஜே.வி.பி.எச்சரிக்கை

தமது கொள்கையை சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஏற்றுக்கொள்ளா விட்டால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சி நீடிக்க உதவியளிக்கும் அதேநேரம் தாம் எந்த ஒரு அமைச்சுப்பதவியையும் ஏற்றுக்கொள்ளாமல் நாடாளு மன்றத்தில் அரசாங்கத்தின் பின்வரிசை ஆசனங்களில் அமரப்போவதாகவும் ஜே.வி.பி.எச்சரிக்கை விடுத்துள்ளது

ஜே.வி.பி.இற்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் இடையில் எழுந்துள்ள அமைச்சர் பதவிதொடர்பிலான முறுகலைத்தடுக்க எதிர்வரும் 15ம் திகதி பேசசுவார்த்தை ஒன்று நடைபெறலாம் என எதிர்பார்க்கப் படுகிறது.

இது தொடர்பாக கருத்துரைத்த ஜே.வி.பி.யினர் அமைச்சுப் பதவி தமக்கு முக்கியமில்லை என்றபோதிலும், நாட்டை மாற்றியமைப்போம் என்ற எமது கொள்கைகை பாதிப்பு ஏற்பட்டு விடக்கூடாது எம்முடன் இணைங்கிக் கொள்ளப்பட்டதற்கிணங்க அரசு நடந்து கொள்ளாவிட்டால் நாம் வீதியில் இறங்கிப் போராடவும் தயங்கப்போவதில்லை என்றும் ஜே.வி.பி. கூறியுள்ளது.

# அமைச்சர்கள் நியமன முரண்பாடு பற்றி ஆராய அமைச்சர்கள் குழு சனாதிபதியால் அமைப்பு

(கொழும்பு)

அமைச்சர்கள் நியமனத்தில் ஏற்பட்டுள்ள முரண்பாடு தொடர்பாக ஆராய்வதற்காக சனாதிபதி அமைச்சர்கள் குழுவொன்றை அமைத்துள்ளார்.

இந்தக் குழுவில் லக்ஷ்மன் கதிர்காமர், அநுரா பண்டாரநாயக்க ,ஜெயராஜ் பெர்ணாண்டோபுள்ளே, சுசில் பிரேம்ஜெயந்த், டக்ளஸ் தேவானந்தா,பேரியல் அஷ்ரப் ஆகியோர் அடங்கியுள்ளனர்

அமைச்சர்கள் தொடர்பில் ஜே.வி.பி.யினருடன் ஏற்பட்டுள்ள முரண்பாடு மற்றும் அர்ஜுன ரணதுங்க சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து விலகியமை போன்றவற்றை இந்த குழு ஆராய்ந்து சனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்கும்.

இதேவேளை விவசாயத்துறை அமைச்சுக்குள் மகாவலித்துறையையும், கலாச்சார அமைச் சுக்குள் திரைப்படத்துறையையும் உள்ளடக்க வேண்டுமென்பதே ஜே.வி.பி.யினரின் கோரிக்கையாகும். அந்த நடைமுறை ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னரே தாம் தமக்குரிய அமைச்சுப் பதவிகளை ஏற்றுக்கொள்ளப்போவதாக ஜே.வி.பி கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது. (32)

# கடமைக்குத் திரும்புகின்றனர்

வடபகுதியில் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களில் கடமையாற்றும் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட ஊழியர்கள் தத்தமது கடமைக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றனர்.

கருணாவினால் மிரட்டி கடமைக்குத்திரும்பாது தடுக்கப்பட்டிருந்த இவ்வூழியர்கள் கருணா தப்பி ஓடியுள்ளதையடுத்து வட பகுதியிலுள்ள தத்தமது அலுவலகங்களுக்கு திரும்பிக்கொண்டிருக்கின்றனர்.

# கிராமிய அபிவிருத்தி வங்கியின் சகல கிளைகளும் நாளை திறக்கும்

(அலுவலகசெய்தியாளர்)

புதுவருடதினத்தினை முன்னிட்டு கிராமிய அபிவிருத்தி வங்கியின் சகல கிளைகளும் நாளை காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 3.00 மணிவரை வங்கி நடவடிக்கையினை மேற்கொள்ளவுள்ளதெனவும் அன்றைய தினம் வாடிக்கையாளர்களுக்கான கைவிசேடம் வழங்கப்படுமெனவும் கிராமிய அபிவிருத்தி வங்கி மேலாளர் தெரிவித்துள்ளார். (சோ)

# வட இந்திய அரசியல்வாதி வழங்கிய இலவசச் சேலை வாங்கச்சென்ற 21 பேர் நெரிசலில் சிக்கிப் பலி

வடஇந்தியநகரமொன்றில் அரசியல்வாதி ஒருவரின் பிறந்ததினத்தன்று இலவச சேலை வாங்கச் சென்ற 21பேர் அங்கு ஏற்பட்ட நெரிசலில் சிக்கி மரணமடைந்துள்ளனர். நேற்று இரவு இடம் பெற்ற இச்சம்பவத்தில் பலியானோரில் 19பேர் பெண்கள் இருவர் சிறுவர்கள் ஆவார்.

லக்னோவில் பா.ஜ.க வைச்சேர்ந்த மேற்படி அர சியல்வாதி பெண்களுக்கு இலவச சேலை வழங்கிக் கொண்டிருந்தபோது திடீரென நெரிசல் ஏற்பட்டதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

# இலக்கத்தகடற்ற வாகனங்களை பாவிப்போர் மீது சட்டநடவடிக்கை

## தமிழீழ காவல்துறை அறிவிப்பு

(அலுவலகசெய்தியாளர்)

இலக்கத் தகடு பொருத்தப்படாத வாகனங்களை பாவனையில் ஈடுபடுத்துபவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரியவந்துள்ளது. மேற்படி விடயம் தொடர்பாக தமிழீழ காவல்துறை வாகன போக்குவரத்துப்பிரிவுப் பொறுப்பாளர் றோய்காந்துடன் எமது செய்தியாளர் தொடர்பு கொண்ட பொழுது தெரிவிக்கையில், வாகன போக்குவரத்து சட்ட விதிமுறை களுக்கமைவாக போக்குவரத்தில் ஈடுபடுத்தப் படவுள்ள சகல மோட்டார்வாகனங்களிலும் இலக்கத்தகடுகள் பொருத்தப்பட்டிருத்தல் அவசியமெனவும்,

இதன்காரணமாக கடந்த 10ந்திகதி முதல் இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதுடன், இதற்கமைவாக வாகன உரிமையாளர்கள் அனைவரும் வாகனங்களுக்கான இலக்கத்தகடுகளை வாகனங்களில் பொருத்தி வீதிப்போக்குவரத்து நடவடிக்கைகளுக்கு ஒத்தாசை நல்கிடும் வண்ணம் வேண்டுவதாகவும் தெரிவித்துள்ளார். (சோ)

# பொருட்கள் வழங்கல்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திலுள்ள துள்ளு குடியிருப்பு, நடுக்குடா கிளியன் குடியிருப்பு கட்டுக்காதன் குடியிருப்புப் போன்ற இடங்களில் புதிதாக மீளக் குடியமர்ந்த 176 குடும்பங்களுக்கு மன்னார் 'உலக தரிசனம்' நிறுவனம் அடிப்படை வசதிகளான மலசல கூடம், தண்ணீர் வசதிகள் வீட்டுக்கூரைகள் (றுபர்சீற்) முன்பள்ளி பாடசாலை சிறுவர்களுக்குரிய பாடசாலைப்பொருட்கள் இப்பகுதி மக்கள் நலன்கருதி வழங்கியுள்ளது.(மி)

# ஈருருளி பள்ளத்துள் வீழ்ந்து ஓட்டிச்சென்ற சிறுவன் காயம்

(கிளிநொச்சி)

கந்தபுரம் பகுதியில் துவிச்சக்கரவண்டியில் பயணித்த சிறுவனின் கட்டுப்பாட்டை இழந்து துவிச்சக்கரவண்டி 10 அடி ஆழமான பகுதிக்குள் வீழ்ந்துள்ளது. இதில் இரத்தினம் யோகேஸ்வரன் (வயது12) என்ற சிறுவன் படுகாயமடைந்து அக்கராயன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளதாக அறியமுடிகின்றது. இச்சம்பவம் நேற்று மதியம் 12.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.(15)

### பலநூற்றுக்..

விடுதலைப்புலிகளுடன் இணைந்து விடுகின்றனர். கருணாவின் வற்புறுத்தல் காரணமாக அவருடன் இருந்த பல அணித்தலைவர்கள் போராளிகளை இவ்வாறு இணைந்து கொள்ளுமாறு அனுப்பிவைத்துள்ளதாகவும் அவர்களும் புலிகளுடன் தொடர்பு ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

### விமானப்..

மட்ட இரகசிய பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் சிறிலங்கா இராணுவத்தின் உளவுப் பிரிவு கருணாவிற்கு பாதுகாப்பு அளிக்கும் விடயத்தில் முந்திக் கொண்டு அழைத்துச் சென்றுள்ளதாகச் தெரிவிக்கப்படுகின்றது.

### ஒருதொகுதி..

பணிப்புரைக்கமைவாக பத்துப் பத்துப் போராளிகளாக தனியார் போக்குவரத்துப்பேருந்துகள் மூலம் இலவசமாக அவர்களது இல்லங் களுக்கு கொண்டு சென்று ஒப்படைக் கப்பட்டுள்ளதாகவும் இதேபோன்ற சேவையில் நியூ ஈஸ் ரன்பஸ் கொம்பனியினரும் ஈடுபட் டுள்ளள தாகவும் அங்கிருந்துவரும் செய்திகள் மூலம் தெரியவந்துள்ளது.

(சோ)

### கருணாகுழு..

டப்படி நீதிமன்றில் ஆஜராக் கப்படாமல் கருணா குழுவினிடம் ஒப்படைக் கப்பெற்றனர்.திருமலையிலிருந்துஇராணுவத்தினரால் அழைத்து வரப் பெற்ற இவர்கள் புணானைக்கு அருகிலுள்ள முறுக்கன் என்னுமிடத்தில் வைத்து கருணா அணியைச் சேர்ந்த ஜீவேந்திரன் என்பவரிடம் ஒப்படைக் கப்பெற்றனர்.

மீனகம், தேனகம் உட்பட மட்டு அம்பாறைப் பகுதிகளிலிருந்து கருணா அணியைச் சேர்ந்தோர் விலகிச்சென்றுகொண்டிருந்த சமயத்திலேயே இவ் ஒப்படைப்புச்சம்பவம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

### அம்பாறை..

தினை விடுதலைப்புலிகள் மீட்ட மகிழ்ச்சியில் தமிழீழ தேசியத் தலைவருக்கும், அம்பாறை மாவட்ட தளபதி ஜனார்த்தனுக்கும் கஞ்சிகுடிச் சாற்றுப்பகுதிக்குச் சென்று வாழ்த்து மடல்களை கையளித்ததுடன் விடுதலைப்புலிகள் போராளிகளுக்கு இனிப்புப்பண்டங்களையும் வழங்கி தங்கள் மகிழ்ச்சியினை தெரிவித் துள்ளனரெனவும் தெரியவந்துள்ளது.

(சோ)

### கருணா..

தார்கள்.

நான்நேற்றுக்காலை ஏழு மணிக்கே கருணாவின் பிடியில் இருந்து விலகிவந்தேன்.

எங்களை வீட்டிற்கு ஓடித்தப்பும் படியும் நேற்றுக் காலை ஏழுமணிக்கு வெருட்டியதுடன் அவர் இருந்த இடத்தில் குண்டு கூடஅடித்தார் ஓடும்படி.

கருணாவும் மகளிர் தளபதியாக இருந்த நிலாவினியும் நேரில் வந்து என்னுடன் கதைத்தார்கள்.

நாங்கள் வைக்கப்பட்டிருந்த முகாமில் இருந்து உடனடியாக அவர்கள் இருக்கும் இடத்திற்கு எங்களை ஏற்றிச்சென்றார்கள். பின்னர் எங்களை வரிசையில் நிற்கவைத்து தங்களுக்கு விரும்பியவர்களை, அவர்களுடைய பக்கத்தைச் சார்ந்தவர்களை எடுத்துவிட்டு எங்களைப் புறம்பாக்கி விட்டு உங்கள் உங்கள் வீட்டிற்கு ஓடித்தப்புங்கள் என்று சொன்னார்கள்.

இதன்போது எங்களில் இருந்து மூன்று பெண் போராளிகளைத் தான் கருணா ஆட்க்கள் எடுத்தார்கள். கடைசியாக ஓடிவரும்போது எங்களில் அறுபது பெண் போராளிகள்தான் இருந்தோம்.

நாங்கள் இருந்த இடத்தில் இருந்து நேற்று முன்தினம் இரவு ஏழு மணிக்குப் பிற்பாடு போராளிகள் அதிகமாக ஐம்பது, நூறு, இரு நூறு என்று தொகை தொகையாக வெளிக் கிடத் தொடங்கிவிட்டனர். மிகுதியாக என்னுடன் மூன்றுநூறு போராளிகள் இருந்தார்கள். அந்த மூன்றுநூறு பேரையும் நான்தான் வீட்டிற்குப் போகும்படி அனுப்பினேன். கருணா ஆக்களுக்குத் தெரியாதவாறு - ஆனால், அவர்கள் காலையில் எல்லோரையும் ஓடிப்போகும்படி சொல்லத் தான் இருந்தார்கள். அதற்கிடையில் பெற்றோரின் வற்புறுத்தலால் சென்றார்கள்.

நேற்று முன்தினம் காலையே மீனகம் இராணுவ வளாகத்திற்குள் பெற்றோர்கள் வந்துவிட்டார்கள். எங்களின் முகாமிற்குள் புகுந்துவிட்டார்கள். தடி எடுத்தவர்கள், கெஞ்சினவர்கள் அழுதவர்கள் அவர்களின் நடவடிக்கைக்கு முன்னால் எதுவுமே செய்ய முடியாமல் போய்விட்டது.

அதனால்தான் பிள்ளைகளில் பெருமளவானோர் அவர்களினால் கூட்டிச் செல்லப்பட்டனர்.

எனது கருத்தின்படி கருணா இப்போது வெளிநாட்டிற்கு வெளிக்கிட்டிருக்கலாம். அல்லது அவர் கொழும்பில் நிற்கலாம். சில தினங்களின் பிற்பாடு வெளிநாட்டிற்குச் செல்லலாம்.

அவர் இறுதியாக எங்களை விடும் பொழுது ஒரு சிலரைக் கூப்பிட்டவர். அவருடன் இருந்த மகளிர் தளபதி சாலி அதாவது, நிலாவினி என்பவர் கூப்பிட்டார். தங்களுடன் வரும்படியும் கொழும்பில் கொண்டு போய்விடுவோம் என்றும் அங்கிருந்து நாங்கள்! வெளிநாடு போகலாம் என்றும் கூறினார்.

அதற்கு நான் என்னுடைய மாவட்டத்தைவிட்டு கடைசி வரையும் வரமாட்டேன். எங்களுடைய வீட்டுடன் போய்ச் சேருவேன். அனாதையாய் தாய் இல்லாமல் எனது இரண்டு தங்கைகள் இருக்கின்றார்கள். அவர்களையாவது நான் காப்பாற்றுவம் என்று எனது வீட்டிற்கு ஓடி வந்து விட்டேன்.

கருணாவுடன் கடைசியாகக் பத்துப் பேர்தான் இருக்க முடியும் என நான் நினைக்கிறேன்.

இதேவேளை, நான் வீட்டில் இருக்கும்போது எனது தலைமையில் இருந்து எனது தளபதிகள் வந்து தமிழலையில் நிற்பதாக அறிந்தேன். வீட்டில் இருந்து ஓடிவந்தேன் அவர்களைச் சந்திப்பதற்காக.

அங்கு வந்து அவர்களிடம் நிலைமைகளைச் சொன்னேன். அங்கிருந்த தளபதிகள் எல்லாம் என்னை நன்றாகத் தெரிந்தவர்கள் என்னை அறிந்தவர்கள். அதனால் நான் மீண்டும் அவர்களுடன் இணைந்து கொண்டுள்ளேன்.

தளபதி ரமணன் தளபதி ரமேஷ் மற்றும் தளபதி தயாமோகன், உமேஷ்காந் முன்னாள் அரசியல் பொறுப்பாளராக இருந்த கிரிசன் ஆகிய சகலரையும் நான் இதன்போது சந்தித்தேன். அவர்களுடன் பேசினேன். தற்போது நான் தமிழீழ விடுதலைப்புலியாகவே இருக்கின்றேன்.

வாகரையில் நடந்த மோதலின்போது எங்களுடன் இருந்த மகளிர் போராளிகளில் ஐந்து பேர்தான் உண்மையில் பாதிப்படைந்தமை எனக்குத் தெரியும். மற்றப் போராளிகள் எமது தலைமையுடன் இணைந்து விட்டார்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### கருணா..

அதேவேளை கருணா தன்னுடைய அளவில் தனியாகச் செயற்பட்டு வருகிறார். எனவும் அவர் புகலிடம் கோரினார் என்றால் சிறிலங்கா இராணுவம் அவருக்குப் புகலிடம் அளிக்கும் எனவும் மேலும் தெரிவித் துள்ளார்.

இது இவ்வாறிருக்க கருணா இத்தகைய வழியில் மீட்கப்பட்டார் என்றால் அது சிறிலங்காவின் புதிய அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான உறவுகளைஇன்னும் சிக்கலாக்கிவிடும். எனவும் பி.பி.ஸி கருத்துத் தெரிவித துள்ளது.

அது மேலும் குறிப்பிடுகையில், கருணாவிற்கு எவரும் புகலிடம் கொடுக்கக் கூடாதென தமிழீழ விடுதலைப்புலிகள் ஏற்கனவே அறிவித் துள்ளனரெனவும் அது சுட்டிக்காட்டியுள்ளது.

### மட்டு..

மாநாட்டு மண்டபம் தமிழ் அலை அச்சகம் பத்திரிகைகாரியாலயம் என்பன கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டன.

இதேபோன்றே தரவையிலுள்ள மீனகம் ராணுவத்தளத்திலிருந்தும் கருணாவின் குழு தப்பி ஓடியுள்ளது. இந்நிலையில் மட்டக்களப்பு நகரின் சுற்றுப்புறங்கள் அனைத்தும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் வந்துள்ளது.

மேலும் மட்டக்களப்பு இராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் இருந்து கருணா குழுவினர் தப்பி ஓடிய அதேசமயம் இராணுவக் கட்டுப் பாட்டுப் பகுதியில் இருந்த அவர்களின் அலுவலகங்களில் இருந்தவர்களும் தப்பி ஓடியுள்ளனர்.







இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 13 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.



அன்பர்கள், நண்பர்கள் வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது உளங்கனிந்த சித்திரைப்புத்தாண்டு வாழ்த்துக்கள்!
AMUTHAK KADAL PAL PORUL VANIGAM
கட்டட நிர்மாணத்திற்கான சீமெந்து வகைகள் கூரைத்தகடுகள்,
எஸ்லோன் வி.பி.சி பைப் வகைகள் கட்டட மரத்தளபாடங்கள்,
வில்லியஸ் நீர் இறைக்கும் இயந்திரம் மற்றும் உதிரிகள் வீட்டுப்பூச்சாடிகள்
சகல வித நிறங்களைக்கொண்ட தீந்தைகள், இரும்புப்பொருட்களை மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
அமுதக்கடல் பல்பொருள் வாணிபம்
டிப்போ வீதி, இல74, கனகபுரம், கிளிநொச்சி.
(கி-9371)




கிராமிய அபிவிருத்தி வங்கி
Central Bank of Sri Lanka
புதுவருட விசேட கொடுக்கல்
வாங்கல்களுக்காக 14 . 04. 2004 புதன்
கிழமை காலை 9.00 மணிமுதல் பி.பகல்
3.00 மணிவரை வங்கி நடவடிக்கைகள்
நடைபெறும் என்பதனை வழமைதாரர்களுக்கு
தெரியப்படுத்துகின்றோம்.
கிராமிய அபிவிருத்தி வங்கி முயற்சியாளரின் குடும்ப வங்கி
வழமைதாரர்கள்
அனைவருக்கும்
எமது புதுவருட
நல்வாழ்த்துக்களை
தெரிவித்துக்
கொள்கின்றோம்
RURAL DEVELOPMENT BANK
(கி-9448)




S-Lon
ISO 9001 - 2000 Certified
MITSUI
Cement (pvt) Ltd.
யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எமது மக்களின் கட்டட நிர்மாண
வேலைகளை உடன் நிறைவு செய்ய மக்களின் சேவையில் வைரமாளிகை.
மிற்சுயி,ஹினோடே சீமெந்து வகைகள் மக்சன் நெற் வகைகள்,
எஸ்லோன் பி.வி.சி பைப் வகைகள், கெவில்டன் மின்னியல் பொருட்கள்
ஆகியவற்றுடன் கட்டட நிர்மாணத்திற்கான அனைத்துப்பொருட்களையும்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய
ஒரே இடம்.
மிற்சுயி உலகின் முதற்தர சீமெந்து -வடபகுதிக்கான முகவர்
மக்சன்நெற் -வன்னிக்கான முகவர்
எஸ்லோன் -வன்னிக்கான முகவர்
வழமையாளர்களுக்கும் ஒப்பந்தகாரர்களுக்கும் விற்பனையின் பின் சேவையும்
வியாபார சிறப்புச்சலுகையும் வழங்கப்படுகிறது.
MITSUI CEMENT
வைரமாளிகை
கட்டடப்பொருள் வாணிபம்
கரடிப்போக்குச்சந்தி அருகாமை, முன்மைச்சாலை, கிளிநொச்சி.
(கி-9370)

மலரும் புத்தாண்டில் எமது வாடிக்கையாளர்களுக்கு உள்ளங்கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்களைத்தெரிவித்துக் கொள்கின்றார்கள்.

# அன்னக்கிளி பல்பொருள் அழகுமாடம்

138,148 கண்டி வீதி,
கச்சேரி அருகாமை,
யாழ்ப்பாணம்

கிளை
துணுக்காய் வீதி,
மல்லாவி. (சி-9360)

# கதிரவன் பல்பொருள் வாணிபம்

பூநகரி வாழ் மக்களுக்கும் வாடிக்கையாளர்களிற்கும், தமிழீழ அனைத்து மக்களுக்கும் போராளிகளிற்கும், மாவீரர்களிற்கும் சமாதானம் நிலவவேண்டுமென வேண்டி இனிய புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவிதுக்கொள்கிறோம்.

உரிமையாளர்,
குமார்,
வாடியடி பூநகரி.

(9369)

# புதுவருட வாழ்த்து

மலரும் 2004 தாரண வருடப்புத்தாண்டில் எமது சங்க உறுப்பினர்கள், வாடிக்கையாளர்கள், பொது மக்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் அமைதி பூத்த சமாதான வாழ்க்கை சித்திக்கப்பிரார்த்திக்கின்றோம்.

பூநகரி ப.நோ.கூ.சங்க
பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்.
பூநகரி.

(சி-9367)

அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

# ஜனவி லேணர்ஸ்

வன்னிப்பெருநிலப்பரப்பின் முதற்தர சேவையாளர் குறித்த காலத்தில் சாரதி அனுமதிப்பத்திரம் பெற நாடுங்கள்

ஜனவி லேணர்ஸ்,
72சேவியர் கடைச்சந்தி,
கிளிநொச்சி.

(4434)

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது
இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.




துணுக்காய்சாலை, மல்லாவி.

(சி-9354)



எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
தாரண சித்திரைப்புத்தாண்டு வாழ்த்துக்கள்!

# பொன்னம்பலம் அரிசி ஆலை

யாழ்சாலை, பரந்தன், கிளிநொச்சி.
தொலைபேசி இல: 021- 2285742

சுத்தமான அரிசி வகைகளை
உங்கள் விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து பெற்றுக்கொள்ள
எம்மிடம் வாருங்கள்!




(சி-9528)

# புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

வன்னி மண்ணில்...

அழகன் பதிப்பகம்

உங்கள்
அச்சுவேலைகள்
எதுவாகினும்
நிறைவேற்ற
அழைக்கின்றது.

யாழ்சாலை, கிளிநொச்சி.

(இ)

# வன்னிமண் எங்கும்...

அறிவியல், அரசியல், பகுத்தறிவு, பெண்ணியம், தலித்தியம், தத்துவம், மொழி, சிறுவர் நூல்கள், செய்தித்தாள்கள், பருவஇதழ்கள், பாடசாலை உபகரணங்கள்

அறிவமுது புத்தகசாலை

ஈழத்து வெளியீடுகள்
போராட்ட, போராளிகள்
வெளியீடுகள்

பிரதானசாலை,
கிளிநொச்சி

தொலைபேசி: 021-228 3961
மின் அஞ்சல் arivamuthu 2000 yahoo.com

மொத்தமாகப் பெற
குறைந்த விலை

கிளைகள் :
புதுக்குடியிருப்பு | முழங்காவில் | வட்டக்கச்சி | மல்லாவி
விசுவமடு | முள்ளியவளை | ஸ்கந்தபுரம்

(சி.9530)


பால், சாதி, மத, பிரதேச வேறுபாட்டை எரிப்போம்.